விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு

Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 கார்த்திகை 21 செவ்வாய்க்கிழமை (07.12.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 353

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# கரு ஜெயசூரியவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை

## அரசாங்கம் நேற்று அறிவிப்பு



கரு ஜெயசூரிய

(கொழும்பு)

அரசாங்கத்துக்கு எதிரான போர்க் குற்றங்கள் குறித்து விசாரணை செய்யப்பட வேண்டும் என்று அறிக்கை ஒன்றில் கூறியுள்ளதாகக் கூறப்படும் எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் துணைத் தலைவர் கரு ஜெயசூரிய மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

சர்வதேச நாடுகளால் இலங்கைக்கு எதிராகப் போர்க் குற்றங்கள் சுமத்தப்படும் நிலையில் இலங்கை தனது நம்பகத்தன்மையை வெளிப்படுத்த அந்தக் குற்றச்சாட்டுக்கள் குறித்த புலனாய்வுகளை நடத்தவேண்டும் என்று கருஜெயசூரிய கூறியதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. அதனைக் கண்டித்தே அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை கொண்டுவரப்போவதாக அரசாங்க அமைச்சர்கள் நேற்று செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் கூறியுள்ளனர். (16ஆம் பக்கம் பார்க்க)

## தீவகத்துக்கான சேவை மீண்டும் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தீவகத்துக்கான போக்குவரத்துச் சேவைகள் மீண்டும் ஆரம்பிக் கப்பட்டுள்ளதாக வடபிராந்திய போக்குவரத்துச் சபை அறிவித்துள்ளது.

கடந்த சில நாட்களாக பெய்த கடும் மழை காரணமாக பண்ணை வீதி பலத்த சேதமடைந்ததுடன் வீதியினூடாக வெள்ளமும் பாய்ந்தது.

இந் நிலையில் பயணிகளுக்கு ஏற்படும் அசௌகரியங்களை தடுக்கும் வகையில் வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் தீவகத்துக்கான (15ஆம் பக்கம் பார்க்க)

## கதிர்காமர் நினைவு தினத்தில் லியம் பொக்ஸ் உரை!

(கொழும்பு)

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் நினைவுப் பேருரையில் பிரித்தானிய பாதுகாப்புச் செயலாளர் லியம் பொக்ஸ் திட்டமிட்டபடி உரையாற்றுவார் என தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் 18ஆம் திகதி கொழும்பில் லக்ஸ்மன் கதிர்காமர் நினைவுப் பேருரை நடைபெறவுள்ளதாக அவரது மனைவி அறிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்குமிடையில் மன கசப்பு நிலவியபோதிலும் லியம் பொக்ஸ், நினைவுப் பேருரையில் உரையாற்றுவார் என குறிப்பிடப்படுகின்றது.

ஜனாதிபதியின் லண்டன் விஜயத்தின் போது ஏற்பட்ட குழப்ப நிலைமைகளினால் பிரித்தானியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான (15ஆம் பக்கம் பார்க்க)

## மின்சார சபை ஊழியர்கள் கூரை மீதேறி ஆர்ப்பாட்டம்

(கண்டி)

இலங்கை மின்சாரசபையின் தற்காலிக மற்றும் ஒப்பந்த முறைப்படி வேலை செய்கின்ற தம்மை உடன் நிரந்தர சேவையில் சேர்க்குமாறு கோரி இலங்கை மின்சார சபையின் கண்டி பிரதான காரியாலய கூரை மேல் ஏறி உண்ணாவிரதம் மேற்கொண்டுவரும் ஊழியர்கள் மீது பொலிஸார் கண்ணீர் புகை மற்றும் நீர் பிரயோகித்ததனால் பதற்ற நிலை ஏற்பட்டது.

இலங்கை மின்சார சபையில் மத்திய மாகாணம் முழுவதும் ஒப்பந்த முறைப்படியும் தற்காலிகமாகவும் சேவை செய்யும் ஊழியர்கள் சுமார் 400 பேர் (15ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் உதவி நிலையமொன்றை அமைக்க லஷ்கர்-இ- தொய்பா முயன்றது

### விக்கிலீக்ஸ் இணையம் தெரிவிப்பு

(கொழும்பு)

இந்தியாவின் கேரளா மற்றும் தமிழ்நாட்டில் தளங்களை அமைப்பதற்கான உதவி நிலையம் ஒன்றை கொழும்பில் ஏற்படுத்துவதற்கு லஷ்கர்-இ-தொய்பா இயக்கம் முயற்சித்ததாக அமெரிக்க ராஜாங்க திணைக்களத்தின் 19.06.2009 ஆம் திகதியிடப்பட்ட தகவலொன்றில் (கேபிள்) குறிப்பிடப்பட்டுள்ளதை விக்கிலீக்ஸ் இணையத்தளம் அம்பலப்படுத்தியுள்ளது.

இந்தியா, பாகிஸ்தான், நேபாளம் ஆகிய நாடுகளில் அபாயகரமான வகையில் லஷ்கர்-இ-தொய்பா அமைப்பு தன்னை விஸ்தரிப்பது குறித்தும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பல்வேறு புலனாய்வு தகவல்களின் (16ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் பிரித்தானிய விஜயத்தை ஒழுங்கு செய்தவர்கள் குறித்து விசாரணை



(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பிரித்தானிய விஜயத்தை ஏற்பாடு செய்தவர்கள் தொடர்பில் விசாரணை ஒன்று மேற்கொள்ளப்படலாம் எனத் தெரிய வருகின்றது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பிரித்தானிய விஜயம் தொடர்பில் முழுமையான அறிவுறுத்தல்கள் லண்டனில் அமைந்துள்ள இலங்கை தூதர (16ஆம் பக்கம் பார்க்க)

# தங்களின் குற்றங்களை மறைக்க எதிர்க்கட்சிகள் மீது அரசு பாய்ச்சல்

## ஐக்கிய தேசியக் கட்சி கண்டனம்



(கொழும்பு)

மாற்றுக் கொள்கையுடையவர்களை அடக்குமுறைக்கு உட்படுத்த அரசாங்கம் முயற்சி மேற்கொண்டு வருவதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

தங்களது குற்றங்களை மூடி மறைத்துக் கொள்வதற்காக அரசாங்கம் எதிர்க் கட்சிகளின் மீது அடக்குமுறைகளை கட்டவிழ்த்து விடுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மீது நடவடிக்கை எடுப்பதன் மூலம் தமது பிழைகளை மறைப்பதற்கு அரசாங்கம் முனைப்புக் காட்டி வருகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜெயசூரியவிற்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் மேற்கொண்டுவரும் முனைப்புக்களுக்கு பதிலளிக்கும் வகையில் அவர் (16ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ நீதிமன்றம் குறித்த வழக்கு டிசம்பர் 9ஆம் திகதி ஒத்திவைப்பு

அரசியல் யாப்பில் கூறப்பட்டுள்ள நீதிமன்றம் என்ற சொற்றொடர் இராணுவ நீதிமன்றையும் உள்ளடக்குமா என்பது தொடர்பான யாப்பு விளக்கத்தை தரும்படி உயர் நீதிமன்றத்தைக் கோரி மேன்முறையீட்டு நீதிமன்றம் செய்த மனு மீதான வழக்கு விசாரணை எதிர்வரும் 9-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

பிரதம நீதியரசர் அரச வைபவமொன்றில் கலந்துகொள்ள சென்றதினால் நீதிபதி குழாமில் ஏனைய அங்கத்தவர்கள் இந்த வழக்கு விசாரணையினை ஒத்திவைத்தனர்.

தன்னை நாடாளுமன்ற செயற்பாடுகளில் கலந்துகொள்ளவும் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்குரிய சகல உரிமைகளையும் அனுபவிக்கவும் கோரி முன்னாள் இராணுவத்தளபதியும் (16ஆம் பக்கம் பார்க்க)

## மாவட்டங்களுக்கிடையிலான இடமாற்றம் மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும்!

### தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களிலிருந்து மேலதிகமாக ஆசிரியர்களை வேறு மாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்வது என்ற திட்டம் மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும் என இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர், மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கும் மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கும் கோரிக்கை விடுத்துள்ளார்.

இவ் விடயம் தொடர்பாக சங்கத்தின் பொதுச் செயலாளரால் விடுக்கப்பட்ட பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மேல (16ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் சேதமடைந்துள்ள வீதிகளால் பாரவூர்திகள் பயணிப்பது ஆபத்தானது

## அரச அதிபர் அறிவிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில்கடந்தசிலதினங்களாக பெய்துவரும் கடும் மழை காரணமாக வீதிகளின் நிலை மோசமாக உள்ளது. இத்தகைய நிலையில் பாரஊர்திகள்பயணிப்பதுமேலும் வீதி களைப்பாதிப்பதோடுஆபத்தான நிலையும் ஏற்பட வாய்ப்பு உண்டு என யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

யாழ் மாவட்டத்தில் பெய்துவரும் மழையால் ஏற்பட்ட அனர்த்தங்கள் தொடர்பாக யாழ் மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலர்கள், கிராம சேவையாளர்கள் மற்றும் யாழ்.மாநகர சபை உறுப்பினர்கள், அனர்த்த விடயங்களோடு தொடர்புடைய உத்தியோகத்தர்களோடு நேற்று நடைபெற்ற கலந்துரையாடலின் பின்பு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், சில பகுதிகளில் வீதிகள் தற்போது புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது. இவைதவிர பாலங்கள் திருத்தப்பட்டும் வருகின்றன. இச்சந்தர்ப்பத்தில் பார ஊர்திகள் அந்த வீதிகளால் பயணித்தால் சேதம் அதிகரித்துவிடும் சாத்தியக் கூறுகள் உள்ளன.

இது தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடம்பண்ணை வீதி, சாவகச்சேரி வீதி போன்றவற் றில் ஆபத்தான பகுதிகளை மிக விரைவில் செப்பனிட்டுத் தரும்படியும் இவற்றுக்குமாற்றுப்பாதைகளை ஏற்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்துள்ளேன்.

இவை தவிர பார ஊர்திகள் பயணிக் கக் கூடிய பாதைகளை சரிவர இனங்கண்டுஅவற்றினைபயணிக்க இலகுவான வகையில் வீதிக் குறியீடுகள் மூலம் போக்கு வரத்தை இலகுபடுத்த வேண்டும்.

மருதங்கேணி, இயக்கச்சி, புல்லாவழி பகுதிகளில் உள்ள வீதிகள் முற்றாக சேதமுற்று காணப்படுகி றது. இவைதவிர நாகர்கோவில் பகுதிக்கு செல்லும் பாதை தொடர்பாக படையினரிடம் கேட்கப்பட்டது.

அவர்கள் அப்பாதையில் பயணிப்பதில் ஆபத்துள்ளதாக தெரிவிக்கின்றனர். அந்தப்பகுதியில் முற்றாக மிதிவெடிகள் அகற்றப்படவில்லை என்ற காரணத்தால் அவர்கள் பயணிக்க அனுமதி மறுத்துவிட்டனர்.

இதேவேளை வீதியோரங்களில் உள்ளமரங்களினால்பாதிப்புஏற்படும் சந்தர்ப்பங்கள் உள்ளன. காரணம் சூறாவளி போன்ற இயற்கை அனர்த்தங்கள் ஏற்பட்டால் இவை வீதியின் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்தும். இதேவேளை தொலைபேசி, மின்கம்பங்களினாலும் விளம்பரப் பதாகைகளினாலும் பாதிப்பு ஏற்படும் சாத்தியக் கூறுகள் உள்ளன என அவர் தெரிவித்தார். (எ-6)

# டெங்கு நோயை பரப்பினால் அரச நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

டெங்கு நோய் பரவுவதற்கு வழியேற்படுத்தும் அரச நிறுவனங்களின் தலைவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரவுள்ளதாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இது தொடர்பான அறிவித்தல்கள் அனைத்து அரச நிறுவனங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. டெங்கு நோய் பரவுவதற்கு 90 சதவீதம் அரச நிறுவனங்கள் காரணமாக அமைந்துள்ளன என தேசிய டெங்கு ஒழிப்பு வாரத்தின்போது கண்டறியப்பட்டுள்ளது.

இந்நிறுவனங்களின் சுற்றுச்சூழலை 2 வார காலத்திற்குள் சுத்தப்படுத்தாவிடில் ஊடகங்களின் மூலம் பெயர்கள் வெளியிடப்படும். அதே வேளை கொழும்பு மாவட்டத்தின் 13 பாடசாலைகள் டெங்கு நோயைப் பரப்பக் கூடிய இடங்களாகக் கண்டறியப்பட்டுள்ளது என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ச-5)

# கிளிநொச்சி தட்டுவன்கொட்டி கிராமத்தில் வெள்ளத்தினால் போக்குவரத்து பாதிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவிற்கு உட்பட்ட தட்டுவன் கொட்டி கிராமத்தில் அண்மையில்பெய்துவரும்பருவகால மழை காரணமாக 80 குடும்பங்கள் வரை பாதிக்கப்பட்டுள்ளது.

இக் கிராமத்தைச் சூழ வெள்ள நீரும் கடல் நீரும் பெருக்கெடுத்துள்ளதால் ஏனைய பிரதேசங்களுக்கான போக்குவரத்துக்கள் முற்றாக துண்டிக்கப்பட்டுள்ளன.

இக் கிராமத்திற்கான போக்குவரத்துக்காக இராணுவத்தினரின் உதவியுடன் 2 படகுகள் சேவையில் ஈடுபட்டுள்ளன.

இதேவேளைஅரசஅதிபரின்பணிப்பிற்கமைய மேலதிகமாக 2 படகுகள் திருகோணமலையில் இருந்து கொண்டுவரப்பட்டுள்ளது. (ச-3,30)

# இலங்கையுடனான வர்த்தகத்தை ஒரு பில். டொலராக்கத் திட்டம்

## பாகிஸ்தான் அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான இருதரப்பு வர்த்தகத்தினை ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக பாகிஸ்தான் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இத்துடன் இலங்கையின் ஏற்றுமதி, பண்டமாற்று மற்றும் வர்த்தக நடவடிக்கைகளை மேலும் இலகுபடுத்த இலங்கைக்கு 200 மில்லியன் டொலர்களை இலகு கடனாக வழங்க பாகிஸ்தான் முன்வந்துள்ளது.

கொழும்புக்கு கடந்த மாதம் விஜயம் செய்த பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலிசர்தாரி, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் உயர்மட்ட அரசியல் தலைவர்களைச் சந்தித்திருந்தார்.

இந்நிலையில், தங்களதுகொழும்பு பயணம் வெற்றிகரமாக அமைந்ததாகவும் இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக மற்றும் பொருளாதார ஒத்துழைப்பினை மேம்படுத்துவதற்கு இரு நாடுகளும் இணக்கம் கண்டுள்ளதாகவும் பாகிஸ்தான் ஜனாதிபதியுடன் கொழும்புக்கு விஜயம் செய்த அந் நாட்டின முதலீட்டுச் சபையின் தலைவரும் முதலீட்டு அமைச்சருமான சலீம் எச் மன்ட் விவெல தெரிவித்துள்ளார்.

இவ் விரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு வர்த்தகத்தினை விரைவில் ஒரு பில்லியன் டொலர்களாக மாற்றும் நோக்குடன் தாம் செயற்பட்டு வருவதாக சலீம் எச் மன்ட் விவெல செய்தியாளர்களுக்குக் கூறியுள்ளார்.

அதேவேளை பாகிஸ்தானின் தேசிய வங்கியின் கிளையின் நடவடிக்கைகளை விரைவில் கொழும்பில் ஆரம்பிக்கவுள்ளதாகவும் சலீம் எச் மன்ட் விவெல செய்தியாளர்களுக்குக் கூறியுள்ளார்.

அத்துடன்இருநாடுகளுக்கும்இடையில் வர்த்தக நோக்கத்தில் அமைந்த பயணங்களுக்கான நுழைவு விவகாரத்தில் தாராளப் போக்கைக் கடைப்பிடித்தல், இரு தரப்புக்கும் நன்மையளிக்கும் முதலீடுகள் மேற்கொள்ளப்படுவதை ஊக்குவித்தல் போன்ற முயற்சிகளும் மேற்கொள்ளப்படவுள்ளன. (ச-5)




# அமெரிக்காவின் முக்கிய கட்டமைப்பை விக்கிலீக்ஸ் வெளியிட்டுள்ளதால் பரபரப்பு

தனது தேசிய பாதுகாப்புக்குஇன்றியமையாதவையென அமெரிக்கா கருதும் உலக நாடுகளிலுள்ள பல கட்டமைப்புக்கள், தளங்களின் பட்டியலை விக்கிலீக்ஸ் இணையத்தளம் வெளியிட்டுள்ளது.

அனைத்து நாடுகளிலும் தமது பாதுகாப்புக்கு முக்கியமான கட்டமைப்புக்களை பட்டியல்படுத்துமாறு தனது தூதரகங்களுக்கு 2009 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் உத்தரவிட்டிருந்தது. இதற்கிணங்கவே மேற்படி பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

இப்பட்டியலில் காஸ் விநியோகக் குழாய்கள், சுரங்கங்கள், தொலைத் தொடர்பு நிலையங்கள் போன்றவையும் இடம்பெற்றுள்ளன.

பயங்கரவாதத்திற்கு எதிராக உலகளாவிய யுத்தமொன்றைநடத்துவதாக அமெரிக்கா கருதினால் அமெரிக்காவின் பாதுகாப்பிற்கு முக்கியமான கட்டமைப்புக்களின் விபரக் கொத்தாக இப்பட்டியல் இருக்கும் என கருதப்படுகிறது.

இப் பட்டியலிலுள்ள பெரும்பாலான கட்டமைப்புக்கள் மருத்துவம் அல்லது கைத்தொழில் தொடர்பானவை ஆகும். இதே வேளை இப்பட்டியல் விக்கிலீக்ஸினால் வெளியிடப்பட்டமைக்கு பிரிட்டனின் முன்னாள் வெளிவிவகார செயலாளர் சேர் மல்கம் ரைவ்கைன்ட் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இத்தகைய தகவல்களையே பயங்கரவாதிகள் அறிந்துகொள்ள ஆர்வம்காட்டுவர் என அவர் கூறியுள்ளார்.

ஆனால் மனித உயிர்களையும் கட்டமைப்புக்களையும் விக்கிலீக்ஸ் ஆபத்துக்குள்ளாக்குகிறது என்ற கருத்தை விக்கிலீக்ஸ் சட்டத்தரணி மார்க் ஸ்டீவன்ஸன் நிராகரித்துள்ளார். இதில் எதுவும் புதிய விடயங்கள் இல்லையென அவர் கூறியுள்ளார். (ச-5)







பொலிஸ்மா அதிபர் டாக்டர் மகிந்த பாலசூரியவின் பணிப்பின் பேரில் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான தமிழ் மொழிப் பயிற்சியில் வடமாகாண பொலிஸ் பகுதிகளில் இருந்து 103 பொலிஸ் உத்தியோகத்தர்கள் 5 மாதகாலப் பயிற்சியை முடித்துக்கொண்டு வெளியேறும் வைபவம் காங்கேசன்துறை பொலிஸ் பயிற்சிக் கல்லூரி நந்தினி மண்டபத்தில் கடந்த 4 ஆம் திகதி நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி த.சில்வா பொலிஸ் அதிகாரி எட்மன் மஹிந்திர ஆகியோர் உரையாற்றுவதையும் பொலிஸ் அதிகாரிகளும் மேற்படி படத்தில் காணப்படுகின்றார்கள்.

இதேபோன்று பயிற்சியை முடித்தவர்கள் இதேநாளில் நாடுபூராகவும் உள்ள 6 பொலிஸ்பயிற்சிக் கல்லூரிகளிலிருந்தும் 600 பேர் பயிற்சியை முடித்து வெளியேறியுள்ளார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## வீரம்

ஒரு வீரன் எப்படி இருப்பான்?

இந்தக் கேள்விக்கு உங்கள் பதில் என்ன?

வீரன் என்றால் பெரிய மீசை வைத்திருப்பான். கையில் கத்தி வைத்திருப்பான். முழங்கைக்கு மேல் தாயத்து கட்டியிருப்பான். கண் சிவப்பாக இருக்கும். ஆள் பயில்வான் மாதிரி இருப்பான். அவன்தான் வீரன். இப்படித்தான் நாம் எல்லோரும் நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் வீரன் அவனில்லை.

ஒரு ராஜா ஒருநாள் தன் மந்திரியைப் பார்த்து கேட்டார்: "நம்முடைய தேசத்தில் இருப்பதிலேயே வீரன் யார்? கோழை யார்? என்று சொல்ல முடியுமா? என்று கேட்டார்.

உடனே அந்த மந்திரி கோழைகள் யார்? வீரர்கள் யார்? என்பதற்கு விளக்கம் கொடுத்தார். கோழை யார் தெரியுமா?

மற்றவர்களின் பொருள் நமக்குக் கிடைக்குமா? என்ற நினைப்பிலேயே இருப்பவன்; முயற்சியே செய்யாதவன்; பாடுபட்டு உழைக்காதவன்; சிரமப்பட்டு வேலை செய்து பிழைக்க விரும்பாதவன்; குடும்பத்தை காப்பாற்ற முடியாமல் சந்நியாசியாகப் போகிறேன் என்று சொல்பவன், இலஞ்சம் வாங்குபவன். இப்படிப்பட்டவர்கள்தான் கோழைகள்.

சரி, அப்படியானால் வீரமுள்ளவன் யார்?

தன்னம்பிக்கையுடன் உழைப்பவன், தன்னுடைய உழைப்பிலிருந்து கிடைக்கும் பணத்தை சிக்கனமாக செலவு செய்து தனது குடும்பத்தை காப்பாற்றுபவன், சுயமுயற்சி உள்ளவன், எப்பொழுதும் சுறுசுறுப்பாக இருப்பவன். இவர்களெல்லாம் வீரம் உள்ளவர்கள். இது அமைச்சரின் விளக்கம்.

இந்த விளக்கத்தை கேட்டார் ராஜா.

"அமைச்சரே, நீங்கள் சொல்வதும் சரிதான். கேட்பதற்கு நன்றாகத்தான் இருக்கிறது. இருந்தாலும் இதை நான் அனுபவத்தில் பார்த்தால்தான் நன்றாக இருக்கும். நம் தேசத்தில் இதற்கு யாரையாவது உதாரணம் காட்ட முடியுமா? என்று கேட்டார்.

"காட்டுகிறேன்" என்றார் அமைச்சர்.

சிறிது நாட்கள் சென்றன. அந்த ராஜாவுக்கு பிறந்த நாள் வந்தது. அதை முன்னிட்டு அரண்மனையில் ஒருவாரம் விருந்து வைத்தார்கள். பொதுமக்கள் அனைவரும் எந்தவித வேறுபாடுமில்லாமல் விருந்து சாப்பிட்டுவிட்டுப் போக வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்.

அரண்மனை விருந்தென்றால் மக்கள் சும்மா இருப்பார்களா? கூட்டம் கூட்டமாக அரண்மனைக்குப் போய் விருந்து சாப்பிட்டார்கள். இது தினமும் கோலாகலமாக நடந்து கொண்டிருந்தது. அந்தச் சமயத்தில் ஒரு நாள் ராஜாவும் மந்திரியும் உலாவப் போனார்கள். ஊருக்கு வெளியில் வயதான ஆள் ஒருத்தன் வயலில் வேலை செய்து கொண்டிருந்தான். அவன் இவர்களை திரும்பிக் கூடப் பார்க்கவில்லை. அவன் பாட்டுக்குத் தன்னுடைய வேலையில் கண்ணும் கருத்துமாக இருந்தான்.

ராஜாவும் மந்திரியும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். அந்த மந்திரி மெதுவாக அந்த ஆளிடம் போனார்.

"பெரியவரே, அரண்மனையில் விருந்து நடக்கிறதே அது உனக்குத் தெரியாதா? சனங்கள் முழுப்பேரும் போய் சாப்பிட்டு விடு வந்திருக்கிறார்கள். நீயும் போய் வயிறார சாப்பிட்டு விட்டு வரவேண்டியது தானே" என்றார். அதற்கு அந்த ஆள்,

"அரண்மனையில் விருந்து நடப்பது எனக்கும் தெரியும். நீங்கள் சொன்னதற்கு நன்றி. இருந்தாலும் என் கையால் உழைத்து அதனால் கிடைக்கும் சொற்ப வருமானத்தில் சாப்பிடும் சாதாரண சாப்பாடே எனக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும். அரண்மனை விருந்தைவிட இதுதான் எனக்குப் பெரியது. அதுவுமில்லாமல் அரண்மனையில் ஒருவாரத்துக்கு வேண்டுமானால் விருந்துச் சாப்பாடு தருவார்கள். அதன்பின் என்ன செய்வது?" என்று சொல்லிவிட்டு தொடர்ந்து தன்னுடைய வேலையைக் கவனிக்க ஆரம்பித்தார்.

இப்பொழுது அந்த அமைச்சர் அந்த ராஜாவைப் பார்த்தார்.

'என் வாழ்நாளிலேயே நான் பார்க்கும் வீரமுள்ள ஆள் இவர் ஒருத்தர்தான்' என்றார். ராஜாவும் அதை ஒத்துக் கொண்டார்.

இந்தக் கதையைக் கேட்டுவிட்டு இந்தக் கால ஆசாமி ஒருத்தர் சொன்னார்:

"என்னுடைய பிறந்தநாளுக்கும் நான் வருடாவருடம் விருந்து வைப்பேன். நண்பர்களையெல்லாம் கூப்பிடுவேன். அடுத்தவாரம் அந்தப் பிறந்தநாள் வருகிறது. இந்தத் தடவை எனக்கு மிகவும் நெருக்கமான ஒரு நண்பனை நான் கூப்பிடப்போவதில்லை" என்றார் உறுதியாக.

"ஏன் சேர் அப்படி?" என்றேன்.

"போன வருடம் பிறந்தநாளன்று வந்தவன் இன்றும் திரும்பிப் போகவில்லை சேர்" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# நிரந்தர நியமனம் வழங்கக் கோரி தொண்டராசிரியர்கள் மகஜர் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட தொண்டர் ஆசிரியர்கள் தங்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டுமெனக் கோரி யாழ்.மாவட்ட கல்வித்திணைக்களத்தில் இன்று 9.30 மணிக்கு மகஜர் ஒன்றை கையளிக்கவுள்ளனர் என யாழ். மாவட்ட தொண்டராசிரியர் சங்கத் தலைவர் அறிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், நீண்ட காலமாக தொண்டராசிரியராக கடமையாற்றி வந்துள்ள எமக்கு 2009 நியமனத்தில் இடம் கிடைக்காமல் போனமை ஏமாற்றத்தை அளிப்பதாகவும் இதனால் தமது நிலை பற்றித் தெளிவுபடுத்தவே இவ்வேற்பாடு செய்யப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் சில பாடசாலைகள் தொண்டராசிரியர் களை இணைத்து வருவதாகவும் அவர்களையும் நியமனம் வழங்குவதாகக்கூறி விட்டு பின்னர் ஏமாற்றக் கூடாது எனவும் அவர் கூறியுள்ளார்.

புரையோடிக் காணப்படும் தொண்டர் ஆசிரியர் பிரச்சனைக்கு தீர்வு கண்டு இனிவரும் காலங்களில் தொண்டராசிரியர்களாக கடமையாற்றுபவர்களுக்கு நிரந்தர நியமனம் என்ற பொய்யான தகவல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

அதேவேளை இம் மகஜர் கையளிப்பில் பாதிக்கப்பட்ட அனைத்து தொண்டராசிரியர்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுள்ளார். (ஸ்ரீ-4)

# முழுநேர இதழியல் டிப்ளோமா கற்கைநெறிக்கான அனுமதிப் பரீட்சை

யாழ்.பல்கலைக்கழக முழுநேர இருவருட டிப்ளோமா 2010/2012 கற்கை நெறிக்கு விண்ணப்பித்தவர்களில் தகுதியானவர்களுக்கான எழுத்துப் பரீட்சை எதிர்வரும் 11ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9.30மணி தொடக்கம் 10.30 வரை யாழ்ப்பாணப் பல்லைக்கழக இராம நாதன் மண்டபத்தில் நடைபெறும் என்றும் இவர்களுக்கான பரீட்சை அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பி வைக்கப்பட் டுள்ளன என்றும் பதிவாளர் தெரிவித்துள்ளார். மேலும் அனுமதி அட்டை கிடைக்காதோர் 02122 26714 என்ற எண்ணில் உதவிப் பதிவாளர்/ அனுமதிக் கிளையுடன் தொடர்புகொள்ளுமாறும் அவர் அறிவித்துள்ளார். ஸ்ரீ

# கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் முத்தமிழ் விழா-2010

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் அசிரியர் கலாசாலை முத்தமிழ் மன்றம் நடத்தும் முத்தமிழ் விழாவின் இரண்டாம் நாள் இயல் இசை விழா இன்று காலை 9 மணிக்கு கலாசாலையின் ரதி லஷ்மி மண்டபத்தில் கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் வே.கா. கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், சிறப்பு விருந்தினர்களாக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம், யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அதிபர் திருமதி க. பொன்னம்பலம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

மேலும் முத்தமிழ்மன்றச் செயற்பாடுகளில் கடந்த காலங்களில் பங்களித்து ஓய்வுபெறவிருக்கும் சான்றோரைக் கௌரவித்தல், பரிசில் வழங்கல், கலை நிகழ்வுகள் என்பன இடம்பெறவுள்ளன. (ஸ்ரீ-2-9)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 170 | 120 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 150 | 200 | 130 |
| தக்காளி | 100 | 120 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 40 |
| கோவா | 60 | 80 | 60 |
| கரட் | 60 | 100 | 70 |
| பூசணி | 50 | 40 | 50 |
| புடோல் | 80 | 50 | 40 |
| வாழைக்காய் | 40 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 160 | 180 | 150 |
| பெரிய வெங்காயம் | 150 | 160 | 140 |
| பாகற்காய் | 140 | 170 | 150 |
| வெண்டிக்காய் | 60 | 70 | 40 |
| கரணைக்கிழங்கு | 60 | 60 | 50 |
| பயிற்றங்காய் | 150 | 170 | 160 |
| லீக்ஸ் | 120 | 160 | 100 |
| பீற்றூட் | 80 | 100 | 70 |
| கறிமிளகாய் | 180 | 180 | 150 |
| முருங்கைக்காய் | 250 | - | 250 |
| போஞ்சி | 100 | 160 | - |
| கத்தரி தம்புள்ள | 140 | 140 | 70 |
| கீரை - 1 பிடி | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 100 | 120 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 50 | 50 |

# இராசி பலன்

07.12.2010

(கார்த்திகை 21, செவ்வாய்க்கிழமை)

துதியை முன்னிரவு 11 .25 மணிவரை

மூலம் முன்னிரவு 7.47 மணிவரை

இராகுகாலம்-3.17-4.47 மணிவரை

சுபநேரம் -10.47-12.17 மணிவரை

அமிர்தசித்தம்

**மேடம்** தைரியத்தோடு செயற்பட்டு சாதனை படைக்கும் நாள், வீட்டைஅழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், தேவைக்கேற்ற பணம் வந்து சேரலாம்.

**இடபம்** சுற்றத்தாரை அனுசரித்து செல்வது நல்லது, குடும்பத்தில் சிறு சிறு கருத்து வேறுபாடுகள் தோன்றி மறையும், வெளியூர் பயணங்களால் அலைச்சல், சோர்வு ஏற்படும்.

**மிதுனம்** விருந்தினர் வருகையால் கலகலப்பான சூழ்நிலை உருவாகும். விரும்பிய பொருள் ஒன்றை வாங்கி மகிழ் வீர்கள், திருமணவாய்ப்புக்கள் தேடி வரும், செல்வாக்கான நாள்.

**கடகம்** பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், எதிரிகள் உங்களை விட்டு விலகுவர், கடன்களை அடைக்கும் வாய்ப்புண்டு, ஆரோக்கியத்தில் தெம்பு பிறக்கும், சுவாரஸ்யமான நாள்.

**சிங்கம்** பிள்ளைகளால் சிறு ஆதாயம் கிடைக்கலாம், அதிகாரிகள் அனுகூலமாக நடந்துகொள்வர், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், தடுமாற்றம் குறையும்.

**கன்னி** இல்லத்தில் சுபகாரியங்கள் நடைபெறலாம், குடும்பத்தினர் உங்களை அனுசரித்து நடப்பர், வாகன சுகமுண்டு, தொழிலில் முன்னேற்றம் காணப்படும்.

**துலாம்** இளைய சகோதரத்தின் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம், நல்லவர்களின் தொடர்புகள் நீடிக்கும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்** வருங்கால நலன் கருதி புதிய முயற்சிகளில் இறங்குவீர்கள், வருமானம் அதிகரிக்கும் சூழ்நிலை உருவாகும், புத்தி சாதுரியத்தால் காரியம் சாதிப்பீர்கள்.

**தனுசு** விருப்பங்கள்நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், சிக்கனமாக நடக்க முற்படு வீர்கள், திடீர் பயணத்தால் பணிகளில் சில தாமதங்கள் ஏற்படலாம்.

**மகரம்** குடும்ப ஒற்றுமைக்கு பெரியோரின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது, சுபசம்பவங்கள் நடைபெறும் நாள், பிரயாணங் களால் சில அலைச்சல்கள் ஏற்படலாம்.

**கும்பம்** நினைத்த காரியங்கள் நிறைவேறலாம், தன வரவைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும், உறவினர்கள் ஒத்தாசை வழங்குவர்.

**மீனம்** தொழில் வளர்ச்சிமேலோங்கும், மற்றவர்கள் மத்தியில் உங்களின் மதிப்பும் மரியாதையும் உயரும், பெண்கள் தொடர்பில் சில உதவிகள் கிடைக்கலாம்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யா/தம்பசிட்டி மெ.மி.த.க. பாடசாலையின் பரிசளிப்பு விழா அண்மையில் இடம்பெற்றது. இதில் பாடசாலை அதிபர் கா.ராமஜெயம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பருத்தித்துறை நகரசபை செயலாளர் அ.அ.நடராஜாவிற்கு மலர்மாலை அணிவித்து வரவேற்பதையும் பிரதம விருந்தினரின் பாரியார் திருமதி நடராஜா மாணவர் ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் விருந்தினர்களுடன் காணப்படுவதையும் படங்களில் காணலாம்.
(படங்கள்:-கரவெட்டி செய்தியாளர்)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு உதவுவதற்கு முன்வர வேண்டும்

## அரச, அரசசார்பற்ற நிறுவனங்களிடம் கோரிக்கை

(கரவெட்டி)

வடரமராட்சி கரையோர மற்றும் தாழ்வுப் பிரதேசங்களில் தொடர்ந்து பெய்துவரும் பருவமழையினால் அப்பகுதி மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

போரினாலும் சுனாமி அனர்த்தத்தினாலும் தமது வீடுகளை இழந்த இப்பகுதி மக்கள் மண்குடிசைகளில் வாழ்ந்து வருவதுடன் வெள்ள அனர்த்தத்தினாலும் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சில குடும்பங்களுக்கு அரச, அரச சார்பற்ற நிறுவனங்களினால் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன.

அவர்களின் வீடுகளிலும் வெள்ளநீர் உட்புகுந்து பெரிதும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இப் பகுதிகளைச் சேர்ந்த அதிகமான மக்கள் மீன்பிடித் தொழிலையும் கூலித் தொழிலையும் மேற்கொண்டு வருகின்றனர்.

பருத்தித்துறை, இன்பசிட்டி, சக்கோட்டை, பொலிகண்டி, நெடியகாடு, வல்வெட்டித்துறை, கெருடாவில், தொண்டைமானாறு மற்றும் தாழ்வுப் பிரதேசங்களில் வாழ்ந்து வரும் மக்களே இவ்வாறு பாதிக்கப்பட்டவர்கள் ஆவர்.

எனவே தங்களின் நிலையைக் கருத்திற்கொண்டு அரச, அரச சார்பற்ற நிறுனங்கள் உதவ முன்வர வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஸ்ரீ-3-24)

# சைக்கிள்களில் சமாந்தரமாக பயணிப்போர் மீது நடவடிக்கை

(கொழும்புத்துறை)

பாடசாலை மாணவர்கள் உட்பட வீதியில் பயணிப்போர் ஒன்றுக்கு மேற்பட்ட சைக்கிள்களுடன் சமாந்தரமாக செல்ல வேண்டாம் என்று வீதிப்போக்குவரத்து பொலிஸார் அறிவித்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை பாடசாலை மாணவர்கள் மூன்று சைக்கிளில் சமாந்தரமாக கொழும்புத்துறை வீதியால் பயணித்துக் கொண்டிருந்ததை அவதானித்த போக்குவரத்து பொலிஸார் மாணவர்களை எச்சரிக்கை செய்து விடுவித்த போதே மேற்கண்ட கோரிக்கையை விடுத்தனர்.

சைக்கிளில் சமாந்தரமாக செல்பவர்கள் பலர் நாளாந்தம் அவதானிக்கப்பட்டுள்ளதாகவும் மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-3-51)

# புலோலியில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் தீவிரம்

(மருதங்கேணி)

புலோலிப் பகுதியில் டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு பருத்தித்துறைப் பொலிஸாரும் சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தரும் இணைந்து வீடு வீடாகச் சென்று துப்புரவுப் பணிகளைப் பார்வையிட்டு வருகின்றனர்.




ஒவ்வொரு வீட்டிலும் உள்ள குப்பை கூழங்களை அகற்றுமாறும் பழைய பாத்திரங்களை பையில் இட்டு வைத்தால் தாம் வாகனத்தின் மூலம் எடுத்துச் செல்வதாகவும் புல்பூண்டுகளை வெட்டி அகற்றுமாறும் அவர்கள் அறிவுறுத்தி வருகின்றனர்.

அத்துடன் டெங்கு பரவும்இடங்களை 3 நாட்களில் துப்புரவு செய்யாவிட்டால் சட்ட நடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர்கள் எச்சரித்துள்ளனர். (ஸ்ரீ-3-35)

# சட்டவிரோத முறையில் மதுபான விற்பனை அதிகரிப்பு

கொக்குவில் பொற்பதி வீதியில் சட்ட விரோத மதுபானம் விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக போயா மற்றும் விடுமுறை நாட்களில் அதிகாலை தொடக்கம் மதுபானம் விற்பனை செய்யப்பட்டு வருவதாகவும் இதனால் மேற்படி பகுதி மக்கள் பலவிதமான இடையூறுகளுக்கு முகம் கொடுப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உத்தியோகபூர்வ மதுக் கடைகள் திறக்கும் நேரத்திற்கு முன்னும் பூட்டிய பின்பும் அதிக விலைக்கு சட்டவிரோத மதுபானம் விற்பனை செய்வதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-3-51)

# யாழ். பிரதான வீதி சேதம்; பயணிப்போர் பெரும் சிரமம்

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணம் பிரதானவீதி குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது. அண்மையில் பெய்தமழை காரணமாக வீதிமேலும் சேதமடைந்துள்ளது.

குறிப்பாக மாட்டின் வீதிச்சந்தியும் சின்னக்கடைச் சந்தியும் அமைந்துள்ள பிரதான வீதியில் பாரிய குழிகளை இனங்காணும் வகையில் மரக்கிளைகள் மற்றும் கற்கள் வைக்கப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

இவ் வீதிகளால் பயணிக்கும் பாதசாரிகள் மற்றும் வாகனங்கள் பெரும் சிரமத்துக்கு மத்தியில் பயணிப்பதைக் காணக் கூடியதாகவுள்ளது.

எனவே உரிய அதிகாரிகள் இதில் கூடிய கவனமெடுத்து செப்பனிட்டுத் தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஸ்ரீ-3-51)

# யாழ்ப்பாணம் மாநகரசபையின் இணையத்தள அங்குரார்ப்பணம்

(கொழும்புத்துறை)

யாழ்.மாநகரசபை இணையத்தள அங்குரார்ப்பண வைபவம் யாழ்.மாநகர மாநாட்டு மண்டபத்தில் இன்று செவ்வாய்க் கிழமை காலை 10 மணிக்கு யாழ்.மாநகர சபை ஆணையாளர் மு.செ.சரவணபவ தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா யாழ்ப்பாண மாநகரசபையில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள இணையத்தளத்தை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக EGAIT நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் வி.வசந்தன் கலந்து கொள்ளவுள்ளார்.

மேற்படி இணையத்தள முகவரியானது Jaffna MC.lkஆகும். (ஸ்ரீ-3-51)

# வடமராட்சி பிரதேசத்தில் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் அதிகரிப்பு

(கரவெட்டி)

வடமராட்சி பிரதேசத்தில் இவ்வருடம் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் அதிகரித்துள்ளதாகவும் இதனைத் தடுப்பதற்கு அனைத்து தரப்பினரும் முன்வர வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில், வடமராட்சியில் மூன்று பொலிஸ் பிரிவுகளான பருத்தித்துறை, நெல்லியடி, வல்வெட்டித்துறை ஆகிய பொலிஸ் பிரிவுகளிலும் மற்றும் பிரதேச செயலகங்களில் உள்ள சிறுவர் நன்நடத்தை அலுவலகங்களிலும் இவ்வருடம் அதிகமான வழக்குகள் பதிவாகியுள்ளன.

இதில் சிறுவர் திருமணம், சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல், சிறுவர்கள் மதுவிற்கு அடிமையாகுதல், வாகனங்களை செலுத்துதல், சிறுவர்களை கடத்துதல், கல்வியை இடைநிறுத்தல் மற்றும் சிறுவர் தொடர்பான ஏனைய வழக்குகள் பதிவாகியுள்ளன.

இதுபோன்ற சம்பவங்களைத் தடுப்பதற்கு பொலிஸார் மற்றும் சிறுவர் நன்னடத்தை அதிகாரிகள் மாத்திரம் செயற்பட்டு தீர்வு காணமுடியாது.

அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்படும் சந்தர்ப்பத்தில் எதிர்காலத்தில் இதனை இல்லாதொழிக்க முடியும் என்று அவர்கள் தெரிவித்தனர். (ஸ்ரீ-3-24)

# தொடர் மழை காரணமாக கால்நடைகள் உயிரிழப்பு

(கரவெட்டி)

வடமராட்சிப் பிரதேசத்தில் பருவமழையினால் அதிகமான கால்நடைகள் உயிரிழந்துள்ளதாக கால்நடைகளின் உரிமையாளர்கள் மற்றும் பாதுகாவலர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

தொடர்ந்து பெய்துவரும் பருவ மழையினால் வடமராட்சி, வடமராட்சி கிழக்கு பிரதேசங்களில் கோழி, ஆடு,மாடு மற்றும் ஏனைய கால்நடைகள் கடுங்குளிர் காரணமாக உயிரிழந்ததாகவும் இதனால் கால்நடைகளின் உரிமையாளர்களுக்கு பாரிய நட்டத்தை ஏற்படுத்தியுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர். (ஸ்ரீ-3-24)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.பல்கலைக்கழக பொருளியல்துறை முதுநிலை விரிவுரையாளர் சி.விஜயகுமாரின் *பருகு நிலை மற்றும் நுண்பாகப் பொருளியல் கோட்பாடுகள்* எனும் நூல் வெளியீட்டு விழா நேற்று யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் என்.ஞானகுமாரன், யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீட பீடாதிபதி க.தேவராஜா ஆகியோர் உரையாற்றுவதையும் நூலின் முதற்பிரதியை பேராசிரியர் ஞானகுமாரனிடம் இருந்து பேராசிரியர் கா.குகபாலன் பெற்றுக்கொள்வதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள் :-எஸ்.கரன்)

# தொடர் மழையால் யாழ்.மாவட்டத்தில் 15,770 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்

## யாழ். அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் தொடர் கன மழை காரணமாக இதுவரையிலும் 15ஆயிரத்து 770 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் கன மழையால் பல பிரதேசங்களில் பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் பாதிப்புக்குள்ளான நிலையில் உள்ளனர்.

இதுவரைக்கும் 15 பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 4 ஆயிரத்து 598 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் உடுவில், வேலணை, மருதங்கேணி, கோப்பாய்,யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் அதிக பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

அத்துடன் வீதிகளும் சேதமுற்று போக்குவரத்துக்கு சிரமத்தை ஏற்படுத்தி வருகிறது. போக்குவரத்து பாதைகளானது எந்த நேரத்திலும் தடைப்படும் சாத்தியக்கூறு உள்ளதால் வர்த்தகர்கள் தம்மிடம் உள்ள உணவுப் பொருட்களை கையிருப்பில் வைத்திருக்க வேண்டும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அது மட்டுமன்றி வீதிகளுக்கு ஏற்பட்டுள்ள சேதங்களை உடனடியாக சீர் செய்ய முடியாது. அதனை தற்காலிக போக்கு வரத்து வீதிகளாக புனரமைப்பதற்கு உடைந்த கட்டடங்களின் தூண்களைக் கொண்டு வீதிகளை செப்பனிட்டு போக்குவரத்தை இலகு செய்ய வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை வடமராட்சிப் பகுதிக்கு மாற்றுப்பாதையை உபயோகிக்க நட வடிக்கை எடுக்க அந்தப் பகுதி பிரதேச செயலகர்களோடு இணைந்து தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தற்போது பாடசாலைகளில் மூன்றாம் தவணைப் பரீட்சைகள் நடைபெற்று வருவதால் வீதிகளின் போக்குவரத்து செப்பனிடுவது முக்கியமானதாகும்.

இதேவேளை தற்போது சண்டிலிப்பாய் பாலம் புனரமைக்கப்பட்டு வருவதால் அப்பாதையூடாக போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி பண்ணைப்பாலம் ஊடாக தீவகப்பகுதிகளுக்கான போக்குவரத்து மேற்கொள்வதிலும் தற்காலிக சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை பாலத்தின் சீரற்ற பகுதிகளினை புனரமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2-6)

## சுய தொழில் கொடுப்பனவிற்கு தெரிவான பயனாளிகளின் விபரம்

வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த எட்டுபயனாளிகளுக்கான சுய தொழில் நிவாரணக்கொடுப்பனவு எதிர்வரும் 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை தென்மராட்சி பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவில் வைத்து வழங்கப்படவுள்ளதாக தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் அறிவித்துள்ளார்.

தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளின் பெயர் விபரம் வருமாறு,

ந.அற்புதராணி (பெரியமாவடி, சாவகச்சேரி), மா.ஈஸ்வரி (பாலாவி தெற்கு, கொடிகாமம்), தி.தயாநிதி (படித்த மகளிர் குடியேற்றத்திட்டம் மிருசுவில்), தி.ஜெயரட்ணம் (முத்துமாரியம்மன் கோவிலடி, மட்டுவில் வடக்கு), க.கமலாதேவி (கச்சாய் தெற்கு கொடிகாமம்), ஜே.ஜெயசீலி அம்மா (படித்த மகளிர் குடியேற்றத்திட்டம், மிருசுவில்), க.ரஞ்சினி, ம.கமலாதேவி (பழைய வாய்க்கால் மிருசுவில்) .

மேற்குறிப்பிட்ட பயனாளிகளுக்கு கோழி வளர்ப்பு, மாடு வளர்ப்பு,தையல், பன்னை வேலை, சுருட்டுச்சுற்றும் தொழிலில் ஆகியவற்றுக்காக எட்டுப் பயனாளிகளுக்கும் மொத்தமாக 60 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-3-29)

# நாட்டில் புலிகள் அமைப்பினர் மட்டுமே போர்க் குற்றங்களை புரிந்துள்ளனர்

## சஜித்பிரேமதாச எம்.பி.சபையில் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் புலிகள் அமைப்பினர் மட்டுமே போர்க்குற்றங்களைப் புரிந்துள்ளதாக ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரச படைகளின் போர்க்குற்றங்களை மறைத்துள்ள அவர் அது தொடர்பான சர்வதேச விசாரணையும் தேவையற்றது என்று கூறி நிராகரித்துள்ளார்.

இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பான விசாரணையின் அவசியம் குறித்து கரு ஜெயசூரிய வலியுறுத்தியிருக்கும் வேளையிலேயே சஜித் பிரேமதாச அதனை மறுத்துரைத்துள்ளார்.

கடும் போக்குவாத மகிந்தவின் ஆதரவுடன் தீவிரப்போக்குடைய பௌத்த மக்களின் ஆதரவை நாடி கட்சித் தலைமையைக் கைப்பற்ற முயலும் சஜித் பிரேமதாச கட்சித் தலைமைக்கு வந்து விட்டால் முற்று முழுக்க இன்னொரு மகிந்தவாகத்தான் செயற்படுவார் என்பதற்கு அவரது அறிக்கைகளே சாட்சியாக அமைகின்றன.

(ஸ்ரீ-2)

# பொலிஸாருக்கான பதவியுயர்வு தொடர்பில் புதிய நடைமுறை

(கொழும்பு)

இலங்கையின் பொலிஸ் திணைக்களம் முன்னெப்போதும் இல்லாதளவுக்குஅரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளதாக உள்ளகத் தகவல்கள் மூலம் அறியக் கிடைத்துள்ளது.

இனிவரும் காலங்களில் பொலிஸ் அதிகாரியொருவர் நிலையப் பொறுப்பதிகாரியாக (ஓ.ஐ.சி) வர வேண்டுமானால் குறித்த பொலிஸ் நிலையம் உள்ளடங்கும் தொகுதியின் ஆளுங்கட்சி அமைப்பாளரின் கடிதம் இருந்தால் மட்டுமே அவர் நிலையப் பொறுப்பதிகாரியாக நியமிக்கப்படுவார். தனது பதவியுயர்வுக் கான கோப்பில் குறித்த கடிதம் இணைக்கப்படாதவர்களின் கோரிக்கைகள் இனிவரும் காலங்களில் பரிசீலனைக்கு எடுக்கப்படமாட்டாது என்று பாதுகாப்பு அமைச்சு பொலிஸ்மா அதிபருக்கு அறிவித்துள்ளது.

தொகுதி அமைப்பாளரின் கடிதம் நேரடியாக பாதுகாப்புச் செயலாளருக்கு முகவரியிடப்பட்டு அவரது பிரதிச் செயலாளர் மித்ர கங்கந்தவின் பார்வைக்கு அனுப்பப்பட வேண்டும் . அதன்பின் அதற்கான அனுமதி பாதுகாப்புச் செயலாளரிடம் இருந்து கிடைத்தவுடன் அக்கடிதம் பொலிஸ்மா அதிபரின் கவனத்துக்கு அனுப்பப்படும்.அதன் பிரகாரம் பாதுகாப்பு அமைச்சு சிபாரிசு செய்பவரை நிலையப் பொறுப்பாளராக நியமிப்பதே பொலிஸ்மா அதிபருக்குள்ள பணியாகும்.

அத்துடன் நூற்றாண்டு விழாவையும் கொண்டாடியுள்ள பொலிஸ் திணைக்களம் இந்தளவுக்கு அரசியல் மயப்படுத்தப்பட்டது இதுவே முதல் தடவையாகும் என்று பலரும் சுட்டிக் காட்டுகின்றனர்.

(ஸ்ரீ-2)

# போக்குவரத்து சபை ஊழியர்களின் வருமானத்தை அதிகரிக்க திட்டம்

(கொழும்பு)

இலங்கை போக்குவரத்து சபை ஊழியர்களது வருமானத்தை அடுத்தவருடம் முதல் உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம தெரிவித்தார்.

சேதமடைந்த நிலையில் இருந்து புதுப்பிக்கப்பட்ட 37 பேருந்துகளை தங்கல்லை பேருந்து நிலையத்திற்கு கையளித்து உரையாற்றும்போது அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான 6 ஆயிரம் பேருந்துகள் தற்போது இயங்கி வருகின்றன. புதிதாக மேலும் ஆயிரம் பேருந்துகள் இறக்குமதி செய்யப்படவுள் ளன.

போக்குவரத்துச் சபை சிறந்த இலாபத்தை ஈட்டித் தரக்கூடிய வகையில் ஊழியர்கள் செயற்படுவார்களாயின் அவர்களது வருமானத்தை உயர்த்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

யாழ்.பிரதேச முன்பள்ளி ஆசிரியர் சங்கம்
பொதுக்கூட்டம்

யாழ்.பிரதேச முன்பள்ளி ஆசிரியருக்கான 2011ஆம் ஆண்டுக்குரிய நிர்வாகத் தெரிவுடன் தொடர்பான கூட்டம் 08.12.2010 புதன் பி.ப 2 மணிக்கு யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறும். அனைத்து முன்பள்ளி ஆசிரியர்களும் தவறாது சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

(3187)

தலைவர்
யாழ். மலரும் பூக்கள் கல்வி அபிவிருத்திச் சபை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜப்பானிய பாதுகாப்பு பிரிவினரிடமிருந்து விடுதலைப்புலிகள் கப்பல்கள் கொள்வனவு

(கொழும்பு)

ஜப்பானிய கரையோரப் பாதுகாப்புப் பிரிவினரிடமிருந்து தமிழீழ விடுதலைப்புலிகள் கப்பல்களை கொள்வனவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறைந்த பட்சம் நான்கு கப்பல்களையேனும் புலிகள் ஜப்பானிய கரையோரப் பாதுகாப்புப் பிரிவிடமிருந்து கொள்வனவு செய்திருக்கலாம் என குறிப்பிடப்படுகிறது.

ப்ளு ஹோவாக், மகாமாய் ராகுய் மற்றும் எக்ஸ்போர் ஆகிய கப்பல்களே இவ்வாறு கொள்வனவு செய்யபபட்டுள்ளதாக சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்துடனான யுத்தத்தின் போது தமிழீழ விடுதலைப்புலிகள் ஆயுதங்களை கடத்துவதற்கு இந்தக் கப்பல்களைப் பயன்படுத்தியதாக தெரிவிக்கப்படும் அதேவேளை 2006ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 17ஆம் திகதி தாக்கி அழிக்கப்பட்ட புலிகளின் கப்பல்கள் ஜப்பானிய கப்பல் எனவும் குறிப்பிடப்படுகின்றது.

ஜப்பானிய கரையோரப் பாதுகாப்புப் பிரிவிடம் புலிகள் 30 கப்பல்களை கொள்வனவு செய்தமை அந்நாட்டு அரசாங்கத்திற்கு தெரியாது எனவும் பொன்னையா ஆனந்தராஜா எனப்படும் ஜயன்னா என்பவரே இந்தக் கப்பல் தொடர்பான கொடுக்கல்- வாங்கல்களை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வர்த்தக கப்பல் கொடுக்கல்- வாங்கல்காரர்களைப் போன்று புலிகள் செயற்பட்டு வந்ததாகவும் தமிழீழ விடுதலைப்புலிகளின் 10 கப்பல்கள் இன்னமும் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

புலிகளின் பெருந்தொகையான கப்பல்களை அரச படையினர் தாக்கி அழித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-4)

## சந்நிதியான் ஆச்சிரமத்தால் மூன்று சில்லுசைக்கிள் அன்பளிப்பு

(தொண்டைமானாறு)

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் சமூகப் பணிகள் பல முன்னெக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் கடந்த 3 ஆம் திகதி சர்வதேச வலுவிழந்தோர் தினத்தில் சந்நிதியான் ஆச்சிரமத்தினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட மூன்று சில்லுச்சைக்கிளினை திருமதி சாந்தி யோகலிங்கம் என்பவரது பாவனைக்காக பருத்தித்துறை ஆதாரவைத்திய சாலையின் பல் வைத்திய நிபுணர் அ.செந்தில் குமரன் வழங்கிக் கௌரவித்துள்ளார். (ஸ்ரீ-4)

## வடமேல் மாகாணசபை உறுப்பினர்கள் 22 பேர் சிங்கப்பூருக்கு பயணமாகியுள்ளனர்

(கொழும்பு)

வடமேல் மாகாண சபையில் அங்கம் வகிக்கும் 22 மகாணசபை உறுப்பினர்கள் நேற்று முன்தினம் இரவு சிங்கப்பூருக்கு பயணமாகியுள்ளனர்.

கல்வி சுற்றுலாவுக்காக சிங்கப்பூர் சென்றுள்ள இவர்கள் எதிர்வரும் 19 ஆம் திகதி நாடு திரும்பவுள்ளனர்.

முதலில் சிங்கப்பூர் செல்லும் இக் குழுவினர் அங்கிருந்து இந்தோனேசியா மற்றும் பிலிப்பைன்ஸ்க்கு செல்லவுள்ளனர். இந்தக் குழுவில் வடமேல் மாகாண சபையில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களான புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.ஏ.எஹியா மற்றும் றிஸ்வி ஐவஹர்சா, புத்தளம் மாவட்டம் ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்களுடன் கிங்ஸ்லி லாலும் அடங்குகின்றனர்.இச்சுற்றுலாவில் மாகாண சபை உறுப்பினர்களுடன் இரண்டு மாகா சபை உறுப்பினர்களின் பிரத்தியேகச் செயலாளர்களும் கலந்துகொள்கின்றனர்.

ஏற்கனவே வடமேல் மாகாண சபையின் 24 உறுப்பினர்கள் கடந்த நவம்பர் மாதம் சீனாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

## கடற்படை உத்தியோகத்தர்களுக்கு பதவியுயர்வு வழங்கப்படவில்லை

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிராக யுத்தத்தை முன்னெடுத்த கடற்படை உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்படவில்லை என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொடவினால் பரிந்துரை செய்யப்பட்ட 70 அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு இன்னமும் பதவி உயர்வு வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த 700 பேருக்கு உடனடியாக பதவி உயர்வு வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. எனினும் யுத்தத்தில் காத்திரமான பங்களிப்பினை வழங்கிய 70 கடற்படை உத்தியோகத்தர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு பதவி உயர்வு வழங்கப்படவில்லை என விசனம் வெளியிடப்பட்டுள்ளது.

பாதுகாப்புச் செயலாளர் கோதபாயவின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக பதவி உயர்வுகள் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

## சதுர்த்தி உற்சவம்

யாழ். வண்ணார்பண்ணை வடகிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தில் சதுர்த்தி உற்சவம் நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து மூலமூர்த்தி பூஜை இலட்சார்ச்சனையைத் தொடர்ந்து ஐந்து கரப் பெருமான் வீதிவலம் வருவார்.தொடர்ந்து பிள்ளையார் கதை படிப்பு நடைபெறும் .மறுநாள் வெள்ளிக்கிழமை நண்பகல் 12.30 மணிக்கு மகா கணபதி ஹோமம் நடைபெறும். (ஸ்ரீ-9)

## தீர்மானம் ஒன்றை நிறைவேற்றுவதன் மூலம் பாராளுமன்ற உறுப்புரிமையை இரத்து செய்ய முடியாது

### முன்னாள் பாராளுமன்ற செயலாளர் நாயகம் தெரிவிப்பு

(கொழும்பு)

தீர்மானம் ஒன்றை நிறைவேற்றுவதன் மூலம் பாராளுமன்ற உறுப்புரிமையை இரத்துச் செய்ய முடியாதென முன்னாள் பாராளுமன்ற செயலாளர் நாயகம் பிரியாணி விஜேசேகர தெரிவித்துள்ளார்.

நீதிமன்றின் உத்தரவின் அடிப்படையில் மட்டுமே பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் உறுப்புரிமையை இரத்து செய்ய முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தனவின் பாராளுமன்ற உறுப்புரிமையை இரத்து செய்யும் அரசாங்கத்தின் முனைப்புக்கள் தொடர்பில் கருத்து வெளியிட்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரிவினை வாதத்திற்கு ஆதரவாக செயற்பட முடியாது எனவும் அவ்வாறு செயற்படுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படமுடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டை பிளவுபடுத்த முயற்சி மேற்கொண்டால் குறித்த நபரின் சிவில் உரிமைகளை இல்லாதொழிக்க சட்டத்தில் இடமிருப்பதாக பிரியாணி விஜேசேகர குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் சாசனத்தின் ஆறாம் இலக்க சட்டத்தின் அடிப்படையில் தனிப்பட்ட நபர்களோ நிறுவனங்களோ நாட்டை பிளவுபடுத்தும் வகையில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ செயற்பட முடியாதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் சிவில் உரிமைகள் பறிக்கப்பட்டால் தன்னிச்சையாகவே பாராளுமன்ற உறுப்புரிமை இரத்து செய்யப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

உச்ச நீதிமன்ற மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதவான்களினால் உருவாக்கப்பட்ட ஆணைக்குழுவினால் பரிந்துரை செய்யப்படும் யோசனைத் திட்டத்திற்கு பாராளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும் பான்மை பலம் வழங்கப்பட்டால் பாராளுமன்ற உறுப்பினரின் அங்கத்துவத்தை இரத்து செய்ய முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

## நாட்டின் அரசியல் வரலாற்றில் மிக மோசமான முறையில் பொன்சேகா பழிவாங்கப்பட்டுள்ளார்

### கருஜெயசூரிய தெரிவிப்பு



(கொழும்பு)

நீதவான்கள் பக்கச் சார்பற்ற முறையில் தீர்ப்புக்களை வழங்க வேண்டுமென ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

நீதி அமைச்சு தொடர்பான குழு நிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நீதிமன்றின் சுயாதீனத்தன்மை குறித்து மக்கள் மத்தியில் சந்தேகம் ஏற்படக் கூடிய வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படக்கூடாது என அவர் தெரிவித்துள்ளார்.

சலுகைகள் ம்ற்றும் வரப்பிரசாதங்களுக்காக நீதிச் சேவையின் சுயாதீனத் தன்மைக்கு நீதவான்கள் களங்கம் ஏற்படுத்தி விடக்கூடாது எனவும் நீதிமன்றில் குறைபாடுகள் காணப்பட்டால் நீதித்துறை குறித்து மக்கள் மத்தியில் அவநம்பிக்கை ஏற்படும் எனவும் அவர் கூறினார்.

நீதிமன்றக் கட்டமைப்பில் காணப்படும் குறைபாடுகள் குறித்து தமது கட்சி ஆக்கபூர்வமான முறையில் விமர்சனங்களை வெளியிட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் அரசியல் வரலாற்றில் மிகவும் மோசமான முறையில் பழிவாங்கப்பட்டவர்களில் ஒருவராக சரத்பொன்சேகா திகழ்வதாக கருஜெயசூரிய சுட்டிக்காட்டியுள்ளார்.

சிறைத்தண்டனை அனுபவித்து வரும் சரத்பொன்சேகாவின் உடல் நிலை நாளுக்கு நாள் மோசமடைந்து வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

உலகின் மிகச் சிறந்த இராணுவத் தளபதியாக அரசாங்கத்தினால் வர்ணிக்கப்பட்ட சரத் பொன்சேகா இன்று மிகவும் மோசமாக நடத்தப்பட்டு வருவதாக அவர் சுட்டிக்காட்டி யுள்ளார்.

பொதுமக்களுக்கு நன்மை ஏற்படக்கூடிய வகையில் நீதிமன்றின் நடவடிக்கைகள் அமையப்பெற வேண்டும் என புதிய நீதிய மைச்சர் ரவூப்ஹக்கீமிடம் கருஜெயசூரிய கோரிக்கை விடுத்துள்ளார். (ஸ்ரீ-2)

## புலிகளின் ஆயுதங்களை வைத்திருந்த இராணுவ கோப்ரல் பொலிஸாரல் கைது

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆயுதங்களை வைத்திருந்த இராணுவக் கோப்ரல் ஒருவரை கிளிநொச்சி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கிளிநொச்சி இராணுவ முகாமில் கடமையாற்றிய கமாண்டோ படைப்பிரிவைச் சேர்ந்த இராணுவ அதிகாரியே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

தொலைத்தொடர்பு உபகரணங்கள், கைத்துப்பாக்கிகள் மற்றும் துப்பாக்கித் தோட்டக்கள் போன்ற பொருட்கள் குறித்த நபரிடமிருந்து மீட்கப்பட்டுள்ளன.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினரின் ஒத்துழைப்புடன் குறித்த நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர். ஆணமடுவ பிரதேசத்தைச் சேர்ந்த இராணுவ உத்தியோகத்தரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

விடுமுறையில் இருந்த காலப் பகுதியில் இந்த இராணுவ அதிகாரி ஆயுதங்கள் மற்றும் தொடர்பாடல் உபகரணங்களை வைத்திருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேல் மாகாண கல்வித் திணைக்களம்

# க.பொ.த.சாதாரண தரப் பரீட்சை -2010
# பயிற்சி வினாத்தாள் -சித்திரம்

## பகுதி - I  1 மணித்தியாலம்

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

■ பின்வரும் கலைப்படைப்பை இனங்கண்டு 1 தொடக்கம் 5 வரையான வினாக்களுக்கு விடை தருக.



1) பின்வரும் கலைப்படைப்பை இனங்காண்க.

2) இக் கலைப்படைப்பு எவ் மரபுக்கமைய செதுக்கப்பட்டுள்ளது. எங்கு காணப்படுகிறது?

3) பின்வரும் கலைப்படைப்பில் காட்டப்பட்டுள்ள ஆசனம்?

4) பின்வரும் கலைப்படைப்பு காட்டும் உட்கருத்து என்ன?

5) பின்வரும் கலைப்படைப்பை உருவாக்கிய கலைஞனின் கலைத்துவ ஆழத்தையும், கலைநுட்பத்தையும், கருத்தாழம் உள்ளதாக ஆராய்க?

■ வினா இலக்கம் 6 தொடக்கம் 10 வரையான தரப்பட்டுள்ள வாக்கியங்களின் வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொற்களை இட்டு வெற்றிடங்களை நிரப்புக.

6) இசுரு முனியாவில் உள்ள நீரில் விளையாடும் யானைகளை வகை குறிக்கும் புடைப்புச் செதுக்கல் தென் இந்தியாவின் ............. செல்வாக்கைக் கொண்டுள்ளது.

7) தெகல் தெருவ விகாரையில் வெஸ்ஸந்தர ஜாதக் கதையை சுவரோவியமாக்கிய கலைஞன் ............ ஆவார்.

8) எகிப்திய பிரமிட்டுக்களுக்கு முன்னால் அமைக்கப்பட்டுள்ள மனித முகத்துடன் கூடிய பாரிய கற்பனையுருச் சிற்பங்கள் ...... என அழைக்கப்படும்.

9) இலங்கையின் பொம்மைக் கூத்துக் கலைமரபு தற்போதும் பேணப்பட்டு வருகின்ற இடத்தின் பெயர் ..................... ஆகும்.

10) தென்னிந்தியா கட்டடக்கலை முறைகளைப் பயன்படுத்திக் கம்பளைக் காலத்தில் அமைக்கப்பட்ட கடலாதெனிய விகாரையை அமைத்த கலைஞர் ................ ஆவார்.

■ வினா இலக்கம் 11 தொடக்கம் 15 வரையான வினாக்களில் பிரதான கூற்றுக்குப் பொருத்தமான தொடரைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

11) சமயஞ் சார்ந்ததும் சாராததுமான தொனிப் பொருட்களைச் சித்தரிப்பதில் திறமை பெற்றிருக்கும் இக் கலைஞரின் ரேகைகளில் அலங்காரப் பண்பினைக் காணக்கூடியதாயுள்ளது.

(1) எ.சீ.ஜீ.எஸ் அமரசேகர (2) ஸ்ரான்லி அபயசிங்க
(3) ஜோர்ஜ்கீற் (4) டேவிட் பெயின்டர்

12) செங்கல்லால் கட்டப்பட்ட இலங்காதிலக விகாரையின் கூரை வேயப்பட்ட பொருள்

(1) தென்னோலை (2) ஓடு (3) தகரம் (4) தகடு

13) பொதுசன ஊடகங்களில் பிரசுரிக்கப்படும் கலைத்தன்மையுடைய இரசனைக்குரிய ஆக்கங்கள் மூலம் இலங்கையில் தேர்ந்தெடுக்கப்பட்ட காட்டுன் கலைஞர் ஒருவர்

(1) யூனூஸ் (2) மஞ்சுசிறீ (3) திஸ்ஸரணசிங்க (4) சுமணதிசநாயக்க

14) பதினேழு அடிகள் நீளமுள்ள பசுவை வரைந்துள்ள சித்திரம் இடம் பெற்றுள்ள குகை

(1) லாஸ்கோ (2) கோகுல் - (3) பொண்டிகோமோ (4) அல்டமீரா

15) பொரளையிலுள்ள சோதமி விகாரையின் ஓவியங்களில் மாறனைத் தோற்கடிக்கும் சந்தர்ப்பத்தில் புத்தர் பெருமான் சித்தரிக்கப்பட்டிருப்பது,

(1) பூமிஸ்பாரிச முத்திரையினால் (2) தியான முத்திரையினால்
(3) தர்மச் சக்கர முத்திரையினால் (4) விதர்க்க முத்திரையினால்

■ வினா இலக்கம் 16 தொடக்கம் 20 வரையான வினாக்களுக்கு தரப் பட்டுள்ள உருவங்களுக்கும் பொருத்தமான உருவை E, F, G, H, I என்பவற்றிலிருந்து தெரிந்து அதன் ஆங்கில எழுத்தை புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

16)  (......)  E

17)  (......)  F

18)  (......)  G

19)  (......)  H

20)  (......)  J

■ வினா இலக்கம் 21 தொடக்கம் 25 வரை கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குப் பின்வரும் A, B, C, D, E என்ற சிற்பங்களை ஓவியங்களை கொண்டு விடை தருக.


A


B


C


D


E

21) A என்ற சிற்பத்தை செதுக்கிய கலைஞரின் பெயர் என்ன?

22) B என்ற சிற்பம் எவ் ஊடகத்தால் செதுக்கப்பட்டுள்ளது?

23) C என்ற எழுத்தில் காணப்படும் ஓவியத்தின் பெயர் என்ன?

24) D என்ற ஆக்கம் எந்த நாகரிகத்திற்குரிய உரு ஆகும்?

25) E எழுத்தினால் காட்டப்படும் ஓவியம் எக் குகையில் காணப்படுகின்றது?

■ வினா இலக்கம் 26 தொடக்கம் 30 வரையான வினாக்களில் தரப்பட்டுள்ள சொற்களின் கருத்து புலப்படுமாறு தனித்தனி வாக்கியங்களை அமைத்து புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

26) உருவரை தகடு (ரெம்பிளேற்)

27) மணியூருக்கட்டு (பொரதம்) 28) இஸ்லாமிய எழுத்து ஓவியம்

29) அரக்கு 30) ஹரிமிகா

## பகுதி - II  2 மணித்தியாலங்கள்

■ அ, ஆ ஆகிய பகுதிகளிலிருந்து ஒரு தலைப்பை மாத்திரம் தெரிவு செய்க.

### பகுதி - "அ"

1) கிராமத்து ஞாயிறுச் சந்தை / கடற்கரையில் மீன் சந்தை

2) நீர் தேடிச் செல்லும் மான் கூட்டம்

3) வயலுக்கு உணவைக் கொண்டு வரும் இல்லாள்

4) சுற்றுலாவின் போது குளத்தில் நீராடும் குழு

5) "கருணை" வெளிப்படும் வகையிலான உணர்வுபூர்வ வர்ண ஓவியம்

### பகுதி - "ஆ"

6) "நாம் ஒரு தாய் மக்களாவோம்" என்னும் தலைப்பில் சுவரொட்டியினை தயாரிக்க.

7) சதுர வடிவில் அமைந்த குஷன் உறைக்கு முழுத்தனக் கோலத்தை வரைந்து வர்ணம் தீட்டுக.

8) வட்டவடிவ பித்தளைத் தட்டத்தில் செதுக்குவதற்கு மரபுவழி அலங்காரக் காட்டுரு கொண்ட ஒழுங்கமைப்பை ஆக்கி வர்ணம் தீட்டுக.

9) ஐந்து இதம் பூ, மொட்டு, இலைகள் ஆகியவற்றை பயன்படுத்தி சீத்தைத் துணிக்கு உகந்த பரவுரூப அலங்காரம் ஒன்று

10) "பாரம்பரிய கிராமியக் கலைகள்" என்னும் பெயருடைய நூல் ஒன்றின் மேலறைக்கான கர்டுரு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராசிரியர் கைலாசபதியும் 19-ம் நூற்றாண்டு ஈழத்து தமிழ் இலக்கியமும்



(நேற்றைய தொடர்ச்சி)

ஈழத்து இலக்கிய வரலாற்றிலே சிறப்பாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டு இலக்கியங்களிலே கைலாசபதி முனைப்பாக ஈடுபட்டிருந்த காலத்திலே அவரது மாணவனாகவும் உதவி விரிவுரையாளராகவும் அமையும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டு ஈழத்து இலக்கியமும் கைலாசபதியும் என்னும் இச் சிறுகட்டுரையில் எனக்கும் அவருக்கும் இருந்த உறவையும் தொடர்பையும் பற்றிக் குறிப்பிடுவதும் தவிர்க்க முடியாததாகின்றது.

தமிழ்ச் சிறப்பு மாணவனாக இருந்த காலத்திலே சங்க இலக்கியம், காவியம், புராணம், சிற்றிலக்கியம் முதலானவற்றிலே அதிகம் ஈடுபாடு காட்டி வந்தேன். இந்த ஈடுபாட்டிற்கு அத்திவாரம் இட்டவர் பண்டிதர் க.வீரகத்தி என்பதும் குறிப்பிடத்தக்கது. தமிழ்ச் சிறப்பு இறுதியாண்டிலே "மூலபாடத் திறனாய்வு" என்னும் பாடத்தினைக் கைலாசபதி கற்பித்தார். அவரின் கற்பித்தற் பாணியும் திறனும் தனியே ஆராயப்பட வேண்டியவை. மூலபாடத் திறனாய்வுப் பாடத்திலே நான் காட்டிய ஆர்வத்தினைக் கண்ட கைலாசபதி ஈழத்துத் தமிழ் இலக்கியங்களைச் சிறப்பாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டினை உனது சிறப்புத் துறையாகக் கொள்ள வேண்டுமென்று பணித்தார்.

நான் விரிவுரையாளராக நியமிக்கப்பட்டதும் முதுமாணிப் பட்டத்திற்குச் சுன்னாகம் அ.குமாரசுவாமிப் புலவர் பற்றிய நுண்ணாய்வினைச் செய்யும்படி ஏவித் தாமே எனது நெறியாளராகவும் இருந்தார். அவரின் நெறிப்படுத்துதலிலே குமாரசுவாமிப் புலவர் பற்றிய நுண்ணாய்வினைச் செய்து கொண்டிருக்கும் பொழுது 6.12.1982 இல் கைலாசபதி காலமானார். கைலாசபதியின் நெறிப்படுத்தலிலே தொடங்கிய ஆய்வு பேராசிரியர் சு.வித்தியானந்தனின் நெறிப்படுத்தலிலே நிறைவுற்றது. இரு பேராசிரியர்களினதும் நோக்கு நிலையையும் அணுகு முறையையும் ஒருங்கே 'அனுபவிக்கும்' வாய்ப்பு எனக்குக் கிட்டியது.

குமாரசுவாமிப் புலவர் பற்றிய ஆய்விலே என்னை ஆர்வத்துடன் ஈடுபடுத்த விரும்பிய கைலாபதி, ஏககாலத்திலே வித்துவசிரோமணி கணேசையர் பற்றிய ஆய்வினைச் செய்யும்படியும், அதனை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடாக நூலுருவாக்கும் ஒழுங்குகளையும் செய்து தந்ததோடு அந்த ஆய்வுக்காக எனக்கு நிதியுதவியையும் பெற்றுத் தந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சுன்னாகம் அ.குமாரசுவாமிப்புலவர் பற்றிய ஆய்வினை மேற்கொள்ளத் தொடங்கியதும் அவரது நூல்கள், கட்டுரைகள், கண்டனப் பிரசுரங்கள், பத்திரிகைக் குறிப்புக்கள், கடிதங்கள் முதலானவற்றை ஒன்றும் விடாமல் ஆழ்ந்து படிக்கும் படி குறிப்பிட்டார். அத்துடன் அப்போது சீவந்தராய் இருந்த குமாரசுவாமிப் புலவரின் மகன் முத்துக் குமாரசுவாமிப் பிள்ளையைக் கண்டு உரையாடித் தகவல்களைக் "கறக்க" வேண்டுமென்றும் கட்டளையிட்டார். அவரின் கட்டளையைச் சிரமேற் கொண்டு திருமுகத்துக் குமாரசுவாமிப் பிள்ளையை அவரது மயிலணி, சுன்னாகத்திலுள்ள 'புலவரகம்' என்னும் அவரது இல்லத்திலே பல முறை சந்தித்து உரையாடினேன். சுன்னாகம் அ.குமாரசுவாமிப் புலவரின் நூல்களை மாத்திரமன்றி, அவர்காலத்து அறிஞர்கள் எழுதிய நூல்களையும், அவ்வறிஞர்களின் வரலாற்றையும் கண்டறிய வேண்டுமென்றும் ஆலோசனை கூறினார். இவைபற்றிய தேடலுக்கு உதவிபுரியக் கூடியவர்களாகப் பின் வருவோரைச் சந்தித்து உரையாடும் படியும் கூறினார்.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, திரு கா.சி. குலரத்தினம்,வ.மு. இரத்தினேஸ்வர ஐயர், வித்துவான் F.X.C. நடராசா,ச.அம்பிகை பாகன், அப்போதைய பேராயர் சபாபதி குலேந்திரன், பேராயர் எஸ் ஜெபநேசன் (அப்போது யாழ்ப்பாணக்கல்லூரி அதிபர்)

இவர்களைக் கண்டு உரையாடி பல தகவல்களையும் சில அரிய நூல்களையும் கடிதங்களையும் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது.

19 ஆம் நூற்றாண்டைத் தெளிவாகவும் சரியாகவும் விளங்கிக் கொள்ள மிஷனரிமாரின் குறிப்புக்களையும் அறிக்கைகளையும் கடிதங்களையும் தெண்டித்துப்பார்க்கும் படியும் கூறினார். ஓரளவுக்கு அவற்றைப் பார்க்கும் வாய்ப்பும் சாத்தியமாயிற்று. படப்பிரதி வசதி (Photo Copy) இல்லாத காரணத்தினால் அவற்றைப் பிரதி செய்ய வேண்டி இருந்தது. சிலர் அரிய நூல்களையும் கையெழுத்துப் பிரதிகளையும் கடிதங்களையும் எனக்கெனத் தந்துதவினர்.அரிய ஆவணங்கள் சிலவும் கடிதங்கள் சிலவும் இன்றும் என்வசம் உண்டு. இவற்றிற்கெல்லாம் மூலகாரணமாக இருந்தவர் பேராசிரியர் கைலாசபதியே.

இரண்டு ஆண்டுகள் இராச வீதியிலுள்ள அவரின் வீட்டிற்கு அயலிலே குடியிருந்தமையால் மாலை வேளைகளில் அவருடன் தனியேயிருந்து உரையாடும் பெரும்பாக்கியமும் எனக்குக் கிடைத்தது. பெரும்பாலும் ஈழத்து இலக்கியம் பற்றியதாகவே எமது உரையாடல் அமையும். என்னைக் கண்டதும் "என்ன புதிதாகப் படித்தீர், புதிய தகவல்கள் ஏதாவது கிடைத்ததா?" என்று தான் கேட்பார். அதற்குப் பயந்து புதிய தகவல்களுடன்தான் அவரிடம் செல்வேன். ஆய்வு முயற்சிகளைத் தூண்டித் துரிதப்படுத்துவதற்குக் ஞ்கலாசபதிக்கு நிகர் கைலாசபதியே தான். இவர் தனது ஈழத்து இலக்கிய முன்னோடிகள் என்ற நூலின் முகவுரையிலே எனது பெயரையும் குறிப்பிட்டமை அவரது பெருமனதையும் அவர் என்மேல் கொண்டிருந்த அன்பையும் புலப்படுத்துகின்றது.

பேராசிரியர் கலாநிதி
**எஸ்.சிவலிங்கராஜா**
தலைவர்,
தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

ஈழத்து இலக்கிய வரலாறு பற்றிச் சிறப்பாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டு பற்றி சமூகவியல் நோக்கிலே தமக்கே உரித்தான மாக்சியப் பார்வை யில் பெருநூல் ஒன்று எழுத வேண்டு மென்ற நோக்கம் அவரிடம் இருந்ததை நான் நன்கு அறிவேன். அதற்கான முயற்சிகளில் அவர் ஈடுபட்டிருந்தார். அவரின் முயற்சி நிறைவு பெற்றி ருந்தால் பத்தொன்பதாம் நூற்றாண்டு ஈழத்து இலக்கிய வரலாறு தெளி வாகத் துலங்கி இருக்கும் என்பதில் ஐயமில்லை. (முற்றும்)

## கண்டியில் மண்சரிவு காரணமாக வயோதிபப் பெண்ணொருவர் பலி

கண்டியில் உள்ள சில பிரதான வீதிகளிலும் மண்சரிவு ஏற்படுவதற்கான சாத்தியம் உள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மண்சரிவு அபாயம் நிலவும் பகுதிகளை அண்மித்த மக்கள் அவதானத்துடன் செயற்படவேண்டும் என தேசிய கட்டட ஆய்வு நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதேவேளை கடுகஸ்தோட்டை, கினிகத்தேன பிரதேசத்தில் வீடு ஒன்றின் மீது மண்மேடு சரிந்து விழுந்ததனால் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் அதிகாலை 3 மணியளவில் இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில் 73 வயதான பெண் ஒருவரே உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மண்சரிவில் சிக்கிய வீட்டில் ஆண் ஒருவரும் இரண்டு பிள்ளைகளும் இருந்த போதிலும் அவர்களுக்கு எவ்வித பாதிப்பு ஏற்படவில்லை எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பேராதனை, கடுகஸ்தோட்டை பிரதான வீதிகளில் குகாகொட பகுதியில் ஏற்பட்ட மண்சரிவு காரணமாக போக்குவரத்துத் தடைப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஸ்ரீ-9)



ஜனாதிபதியின் இரண்டாவது பதவியேற்பு வைபவத்தை முன்னிட்டு ஜே/406 கற்கோவளம் கிராமசேவையாளர் காரியாலயத்தில் கிராமசேவையாளர் கௌதமன் வீட்டுத் திட்டப் பயனாளி ஒருவருக்கு தென்னை மரக்கன்று ஒன்றை வழங்குவதைப் படத்தில் காணலாம்.

## நெல்லியடிச் சந்தியிலிருந்து மாலுசந்திவரையான யாழ்.-பருத்தித்துறை வீதி மூடப்படவுள்ளது

யாழ்.-பருத்தித்தறை வீதியின் விஸ்தரிப்புப் பணிகளுக்காக நெல்லியடிச் சந்தியிலிருந்து மாலுசந்தி வரையான யாழ். - பருத்தித்துறை வீதியை (எபி20) நாளை முதல் மறுஅறிவித்தல் வரும் வரை மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே நாளையிலிருந்து சகலவிதமான வாகனங்களும் பொதுமக்களும் மறு அறிவித்தல் வரை மாற்றுப்பாதை வழியாக வதிரிச் சந்தி வரை பயணம் செய்து பின் மாலுசந்தியை அடையுமாறு யாழ்.வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதம பொறியியலாளர் வி.சுதாகர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-4)

## கொழும்பு நகரில் வாழும் மக்களுக்கு தொடர்மாடி வீடமைப்புத் திட்டங்கள்

### பாதுகாப்பு செயலர் அறிவிப்பு



(கொழும்பு)

கொழும்பு நகரில் சட்டவிரோதமான குடியிருப்புக்களில் வாழும் மக்களுக்கு தொடர்மாடி வீடமைப்புத்திட்டங்கள் அமைத்துக் கொடுக்கப்படுமென பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற "சுஜாதா ஜெயவர்த்தன" நினைவுக் கருத்தரங்கில் "கொழும்பு நகரின் அபிவிருத்தித் திட்டம்" என்ற தொனிப்பொருளில் உரையாற்றும் போதே பாதுகாப்புச் செயலாளர் இவ்வாறு குறிப்பிட்டார்.

" கொழும்பு நகரில் சட்டவிரோத குடியிருப்புக்களில் வாழும் மக்களுக்கு கொழும்பு நகருக்குள்ளேயே அடிப்படை வசதிகளுடனான தொடர்மாடி வீடமைப்புத் திட்டங்கள் அமைத்துக் கொடுக்கப்படும்.

சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட வீடுகளில் சுமார் 70 ஆயிரம் குடும்பங்கள் வசிக்கின்றன. இதனால் நகரில் பாரிய நெருக்கடிகள் தோன்றியுள்ளன.

இம்மக்கள் தமது வாழ் வாதாரத்தை நகரிலேயே தேடிக்கொள்கின்றனர்.எனவே இவர்களை நகரிலிருந்து அப்புறப்படுத்த முடியாது.

எதிர்வரும்2 வருடகாலப் பகுதிக்குள் 30ஆயிரம் வீடுகளை நிர்மாணித்து முடிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அத்தோடு நகரில் உள்ள அரசாங்க அலுவலகங்கள் அனைத்தும் பத்தரமுல்லையில் நிர்மாணிக்கப்பட்டு வரும் செத்சிரிபாய இரண்டாம் கட்டத்திற்கு கொண்டு செல்லப்படவுள்ளன" என அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச பணியாளர்களின் மன நிலையை மாற்றும் பொருட்டு புதிய வேலைத்திட்டம்

(கொழும்பு)

அரச பணியாளர்களின் மன நிலையில் மாற்றத்தை ஏற்படுத்தும் பொருட்டு புதிய வேலைத்திட்டங்களை ஆரம்பிக்கவிருப்பதாக உற்பத்தி அபி விருத்தி அமைச்சர் லக்ஸ்மன் செனவிரட்ண தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியில் கணிசமான முன் னேற்றத்தை அடைய முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்துடன் இணைந்து கொண்டதன் பின்னர் மகியங்கனையில் வைத்து அலுவல்களை பொறுப்பேற்று உரையாற்றும் போது அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் நீர்வடிகாலமைப்புத் துறை அமைச்சர் நிமல் சிறி பாலடி சில்வாவும் கலந்து கொண்டிருந்தார். (ஸ்ரீ-2)

# இலங்கை பணியாளர்களுக்கு புதிய வேலை வாய்ப்புக்கள்

இலங்கைப் பணிப்பாளர்களுக்கு டோஹா, கட்டார் இராஜ்ஜியத்தில் புதிய வேலை வாய்ப்புக்கள் பெற்றக்கொடுக்கப்படும் என வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது. எதிர்வரும் 2022ஆம் ஆண்டில் உலககிண்ண உதைபந்தாட்டப்போட்டி கட்டாரில் நடத்தப்படவுள்ளது. இதன் காரணமாக பல கட்ட வேலைப்பாடுகள் அங்கு இடம்பெற்று வருவதாக பணிய கத்தின் மேலதிக பொது முகாமையாளர் எல்.கே. றுகுணகே தெரிவித்துள் ளார். அந்த பணிகளில் இலங்கைப் பணியாளர்களையும் இணைத்துக் கொள் வது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளதாகவும் அவர் குறிப் பிட்டார். (ஸ்ரீ-2)

# சுயாதீன ஆணைக்குழுக்களின் நடவடிக்கைகள் விரைவில் ஆரம்பம்

(கொழும்பு)

18ஆவது அரசியல் யாப்பு திருத்தத்தின் அடிப்படையில் நியமிக்கப்பட வுள்ள நாடாளுமன்ற சபை மற்றும் சுயாதீன ஆணைக்குழுக்களுக்கான உறுப்பினர்களை நியமிக்கும் நடவடிக்கைகள் எதிர்வரும் தினங்களில் மேற் கொள்ளப்படவுள்ளதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவற்றின் செயற்பாடுகள் எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி வரை யில் நடைபெறவுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

ஜனாதிபதியினால் நாடளுமன்ற சபைக்கான உறுப்பினர்கள் நியமிக் கப்பட்டதைத் தொடர்ந்து அதன் நடவடிக்கைகள் ஆரம்பமாகும் என அரசாங் கத்தின் பேச்சாளர் ஒரு வர் குறிப்பிட்டுள்ளார்.

18ஆவது அரசியல் அமைப்பின் கீழ் 7 சுயாதீன ஆணைக்குழுக்கள் நிய மிக்கப்படவுள்ளன. நாடாளுமன்ற சபையில் 5 உறுப்பினர்கள் உள் ளடக்கப்படவுள்ளனர். அவர்களில் பிரதமர் சபாநாயகர் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோருடன் எதிர்க்கட்சித் தலைவராலும் பிரதமராலும் தெரிவு செய்யப் படுகின்றவர்களும் உள்ளடங்குவர். (ஸ்ரீ-2)

# பாராளுமன்ற உறுப்பினர்கள் சபையில் முன்மாதிரியாக நடந்துகொள்ளவேண்டும்

## சபாநாயகர் அறிவுறுத்து

(கொழும்பு)

பாடசாலை மாணவர்கள் பாராளுமன்ற பார்வையாளர் கலரியில் அமர்ந் துள்ள நிலையில் சபையில் சகல உறுப்பினர்களும் ஒழுக்கத்துடன் முன் மாதிரியாக நடந்துகொள்ள வேண்டும் என சபாநாயகர் சமல் ராஜபக்ஷ கடந்த 3ஆம் திகதி பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

ஒக்ஸ்போர்ட் யூனியனில் ஜனாதிபதியின் உரை இரத்துச் செய் யப்பட்ட தன் எதிரொலியாக சபைக்குள் ஏற்பட்ட அமளி துமளியின் போது பாட சாலை மாணவர்கள் பார்வையாளர் கலரியில் அமர்ந்திருந்தனர்.

மாணவர்கள் இருப்பதை சுட்டிக்காட்டி உறுப்பினர்களை அமைதியாக இருக்குமாறு சபாநாயகர் கூறியபோதும் அமளிதுமளி தொடர்ந்தும் ஏற் பட்டது.

இந்த நிலையிலேயே பாடசாலை மாணவர்கள் வெளியேற்றப்பட்டனர். இச்சம்பவத்தை உறுப்பினர்களுக்கு சுட்டிக்காட்டியே சபாநாயகர் மேற் கண்ட அறிவுறுத்தல்களை விடுத்தார். (ஸ்ரீ-2)

# வடபகுதி மக்களின் உளச் சுகாதாரத்தை மேம்படுத்த அவுஸ்திரேலியா நிதியுதவி

(கொழும்பு)

வடபகுதி மக்களின் உளச் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கு அவுஸ்தி ரேலியா 50 மில்லியன் வழங்கத் தீர்மானித்துள்ளது.

யுத்தம் காரணமாக வடபகுதி மக்கள் உள ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளதா கவும் மக்களின் உளச் சுகாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப் படும் என இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் கெத்திக்ளு மன் தெரிவித்துள்ளார்.

சுமார் ஒரு வருட காலத்திற்கு இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட வுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

வடபகுதி மக்களின் உளச் சுகாதாரத்தை மேம்படுத்தும் திட்டத்தில் பங்கு பற்ற சந்தர்ப்பம் கிட்டியமை மகிழ்ச்சி அளிப்பதாக உயர்ஸ்தானிகர் தெரிவித் துள்ளார். வட மாகாணத்தில் பத்து உளச் சுகாதார மையங்கள் நிறுவப்பட வுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

மீள் குடியேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் வேளையில் மக் களின் உளச் சுகாதாரப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படவேண்டியது இன்றியமையாத தேவையாக அடையாளம் காணப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# ஐ.தே.கட்சியின் யாப்பை நிறைவேற்ற கோரிக்கை

ஐக்கிய தேசிய கட்சியின் வருடாந்த சம்மேளன கூட்டத்தில் அனைத்து தரப் பினரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என கட்சியின் தவிசாளர் காமினி ஜெயவிக்ரம பெரேரா தெரிவித் துள்ளார்.

கட்சியின் சம்மேளன கூட்டத்தின் போது அதன் யாப்பு திருத்தம் சமர்ப் பிக் கப்படவுள்ளது. இதனை நிறைவேற்று மாறும் நிறைவேற்றிக் கொள்ளாத பட்சத் தில் தொடர்ந்தும் தற்போதுள்ள கட்சி யின் யாப்பே நடைடுறையில் இருக்கும் என வும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# பெண்களுக்கான வன்முறை ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு வீதி நாடகம்

(யாழ்ப்பாணம்)

பெண்களுக்கான வன்முறை ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு சமூக செயற்பாட்டு மையத்தினால் பெண்களுக்கான விழிப்புணர்வினை ஏற்ப டுத்தும் விதமாக வீதி நாடகங்கள் நடாத்தப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் நாளை புதன்கிழமை வேலணை பிரதேச செயலகர் பிரிவிற்குட்பட்ட ஜே/26 புங்குடுதீவு தேவாலயத்தில் பிற்பகல் 2 மணிக்கும், ஜே/27 அம்பிகை நகர் பொதுமண்டபத்தில் பிற்பகல் 4 மணிக்கும் நடைபெறும். (ஸ்ரீ-4)

# 2010.12 07 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

✠ கி.மு.43 உரோம அரசியல்வாதி மார்க்கஸ் டலியாஸ் சிசேரோ படுகொலை செய்யப்பட்டான்.

✠ 1724 போலந்தின் டொரூன் என்ற இடத்தில் ஒன்பது புரட்டஸ்தாந்து மதத்தினருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதை அடுத்து அங்கு கலவரம் மூண்டது.

✠ 1787-டெலவெயர் 1ஆவது மாநிலமாக ஐக்கிய அமெரிக்காவில் இணைந்தது.

✠ 1815-நெப்போலியனுக்கு ஆதரவாக இருந்த பிரெஞ்சுத் தளபதி மிக்கேல் நேய் என்பவனுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

✠ 1900 மார்க்ஸ் பிளாங்க் தனது பேர்லின் இல்லத்தில் வைத்து புகழ்பெற்ற கரும் பொருள் வெளியேற்ற விதியைக் கண்டுபிடித்தார்.

✠ 1910-யாழ்ப்பாணம் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் புதிய கட்டடம் திறக்கப்பட்டது.

✠ 1917- முதலாம் உலகப் போர்: ஆஸ்திரியா-ஹங்கேரி மீது ஐக்கிய அமெரிக்கா போரை அறிவித்தது.

✠ 1941-இரண்டாம் உலகப் போர்: பின்லாந்து, ஹங்கேரி, போலந்து, ருமேனியா ஆகியவற்றின் மீது கனடா போரை அறிவித்தது.

✠ 1946- ஜோர்ஜியாவின் அட்லாண்டாவில் உணவுச்சாலை ஒன்றில் இடம்பெற்ற தீ விபத்தில் 119 பேர் கொல்லப்பட்டனர்.

✠ 1949- சீனக் குடியரசின் அரசு நான்கிங் நகரில் இருந்து தாய்வானுக்கு மாறியது.

✠ 1966-துருக்கியில் இராணுவ முகாம் ஒன்றில் இடம்பெற்ற தீ விபத்தில் 68 பேர் கொல்லப்பட்டனர்.

✠ 1971-பாகிஸ்தானில் நூருல் அமீன் பிரதமராகவும் சுல்பிக்கார் அலி பூட்டோவை உதவிப் பிரதமராகவும் கொண்ட கூட்டணி அரசை ஜனாதிபதி யாகியாகான் அறிவித்தார்.

✠ 1972-அப்போலோ திட்டத்தின் கடைசி விண்கலம் அப்போலோ 17 சந்திரனை நோக்கி ஏவப்பட்டது.

✠ 1975- கிழக்குத் தீமோரை இந்தோனேசியா முற்றுகையிட்டது.

✠ 1983-ஸ்பெயின் மாட்ரிட் நகரில் இரண்டு விமானங்கள் மோதியதில் 93பேர் கொல்லப்பட்டனர்.

✠ 1987-கலிபோர்னியாவில் பறந்து கொண்டிருந்த விமானத்தில் பயணி ஒருவர் தனது முன்னாள் முதலாளியையும் விமான ஓட்டியையும் சுட்டுக் கொன்றபின் தன்னைத் தானே சுட்டுக்கொன்றான்இ.இதனால் விமானம் தரையில் மோதியலில் அதில் பயணம் செய்த 43 பேரும் கொல்லப்பட்டனர்.

✠ 1988-ஆர்மீனியாவில் இடம்பெற்ற 6.9 ரிக்டர் நிலநடுக்கத்தில் 25 ஆயிரம் பேர் கொல்லப்பட்டு 4 இலட்சம் பேர் வீடுகளை இழந்தனர்.

✠ 1988-யாசர் அரபாத் இஸ்ரேலை தனி நாடாக அங்கீகரித்தார்.

✠ 1995-கலிலியோ விண்கலம் விண்ணுக்கு ஏவப்பட்டு 6ஆண்டுகளின் பின்னர் வியாழனை அடைந்தது.

### பிறப்பு

✠ 1928 -நோம் சோம்சுக்கி, அமெரிக்கப் பேரறிஞர்

### இறப்புக்கள்

✠ 1947-நிக்கலாஸ் பட்லர், நோபல் பரிசு பெற்றவர் (பி.1862)


✠ 1956-லாரி பர்ட், முன்னாள் அமெரிக்க கூடைப்பந்து வீரர்

✠ 1985-றொபேட் கிறேவ்ஸ், ஆங்கில எழுத்தாளர் (பி.1895)

✠ 1993-வூல்ஃப்காங்க் போல், நோபல் பரிசு பெற்றவர் (பி.1913)

✠ 1998-மார்ட்டின் றொட்பெல், நோபல் பரிசு பெற்றவர் (பி.1925)

இரண்டாம் உலகப் போர் ஜப்பானியர் ஹவாயின் பேர்ள் துறைமுகத்தைத் தாக்கினர்.



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மேல் மாகாண கல்வித் திணைக்களம்


# க.பொ.த.சாதாரண தரப் பரீட்சை -2010

# பயிற்சி வினாத்தாள் - விஞ்ஞானம் - II

*நேற்றைய தொடர்ச்சி....*

**பௌதீகவியல்**

9)




ஒளி ஊடுகடத்தும் திரவம் கொண்ட பாத்திரத்தின் கீழே A என்னும் புள்ளியில் உள்ள ஒளிரும் பொருளொன்றில் இருந்து வரும் ஒளிக்கதிரொன்றின் நடத்தையை மேலேயுள்ள படம் விளக்குகின்றது.

(i) ஒளியின் இவ்வாறான தோற்றப்பாட்டை எவ்வாறு அழைப்பர்

(ii) படுகோணத்தை தரப்பட்டுள்ள ஆங்கில எழுத்துக்களைப் பயன்படுத்தி எழுதுக.

(iii) (அ) $E_2$ இல் கண்ணை வைத்து ஒளிரும் பொருளின் அமைவை மாற்றி BC கதிர் திரவமேற்பரப்பிரப்பினூடாக செல்லவிடும் போதுள்ள படுகோணத்தை எவ்வாறு அழைப்பர்?

(ஆ) $E_3$ இல் கண்ணை வைத்து பார்த்த போது ஒளிக்கதிர்கள் கண்ணை வந்தடைந்ததாயின், அவ்வாறான சந்தர்ப்பத்தில் தோன்றும் தோற்றப்பாட்டை எவ்வாறு அழைப்பர்?

(இ) வினா (அ), (ஆ) கூறப்பட்ட தோற்றப்பாடுகளில் விரும்பிய ஒன்றை வரிப்படம் மூலம் வரைந்து காட்டுக.

(iv) உண்மையான திரவ மட்டத்தின் உயரம் 25cm ஆகும். கண் $E_1$ இடத்தில் இருக்கும் போது ஒளிரும் பொருளின் ஆழம் 20cm இல் உள்ளது போல் தோன்றியது.


(அ) திரவமட்டத்தை மாற்றாது திரவத்தினுள் யாதேனும் கரையக்கூடிய பதார்த்தத்தை சேர்த்தால் தோற்ற ஆழத்தில் மாற்றம் ஏற்படுமா?

(ஆ) உங்கள் விடைக்கான காரணத்தை சுருக்கமாக விளக்குக.

(இ) மேலே வழங்கப்பட்ட வாசிப்புகளைக் கொண்டு திரவத்தின் முறிவுச்சுட்டியைக் காண்க.

(ஈ) பாத்திரத்தின் வடிவம் படத்தில் உள்ளவாறு அமைந்தால் முறிவுச் சுட்டியின் பெறுமானத்தில் மாற்றம் ஏற்படுமா?

(உ) திரவத்தினால் பாத்திரத்தின் சுவர்கள் மீது தாக்கும் அமுக்கத்தில் மாற்றம் ஏற்படுமா?


A

(v) பாத்திரத்தில் உள்ள நீரினைக் குறைப்பதற்கு பீங்கான்களினால் செய்யப்பட்ட கோப்பை பயன்படுத்தப்பட்டது. தவறுதலாக கோப்பையின் பிடி உடைந்து நீரினுள் பிடி அமிழ்ந்தாலும் கோப்பை மிதந்து கொண்டிருந்தது.

(அ) கோப்பை மிதப்பதையும், பிடி அமிழ்வதையும் விளக்கும் விதியின் பெயரைக் கூறுக.


(ஆ) மிதக்கும் கோப்பையின் மீது திரவத்தினால் வழங்கப்படும் விசை யாது?

(இ) கோப்பையின் நிறைக்கும், வினா (ஆ) கூறிய விடைக்கும் உள்ள தொடர்பை எழுதுக.

(ஈ) மிதக்கும் கோப்பையின் மீது இரும்பு உருண்டைகளை ஒவ்வொன்றாக இட்டபோது கோப்பை திரவத்தினுள் அமிழும் ஆழம் அதிகரித்தது. இத்தோற்றப்பயன்பாட்டை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்ட உபகரணம் ஒன்றின் பெயரைக் கூறுக.

(உ) பாத்திரத்தில் உள்ள நீரின் ஆழம் 30cm ஆக உள்ள போது கோப்பையின் பிடியின் மீது தாக்கும் அமுக்கத்தைக் காண்க. (திரவத்தின் அடர்த்தி $1100kgm^{-3}$, புவியீர்ப்பு ஆர்முடுகல் $10ms^{-2}$)

10)




A) சர்வசமமான மின்குமிழ்கள் மூன்று, மின்கலங்கள் மூன்று, ஆளிகள் மூன்று என்பவற்றைக் கொண்டு அமைக்கப்பட்ட மின்சுற்று மேலே படத்தில் காட்டப்பட்டுள்ளது.

(i) (அ) இச்சுற்றினூடாக மின் ஓடுவதற்கு குறைந்தது எத்தனை ஆளிகள் இணைக்கப்பட வேண்டும்.

(ஆ) அவ்ஆளிகளைக் கூறுக.

(ii) (அ) மின்கலங்களை சமாந்தரமாக இணைத்தால் மின்குமிழ்களின் பிரகாசம் கூடுமா? அல்லது குறையுமா?

(ஆ) ஒரு மின்கலத்தின் மின்னியக்கவிசை 2V எனின் அச்சந்தர்ப்பத்தில் மின் சுற்றினுள் உள்ள மின்னியக்க விசை எவ்வளவு?

(iii) மூன்று மின்குமிழ்களும் சர்வசமமானவையாயினும் ஒரு மின்குமிழ் பிரகாசமாக ஒளிரும். அம்மின்குமிழ் எது?

(iv) ஒரு மின்குமிழின் தடை 20Ω எனின் சுற்றில் இணைக்கப்பட்ட இரண்டு மின்குமிழ்களின் சமானத்தடையைக் காண்க.

(v) இச் சுற்றின் கம்பிகளுக்கு அண்மையில் திசைகாட்டியை வைத்த போது அது திரும்பலைக் காட்டியது.

(அ) மின்கலங்களின் முனைகளை மாற்றினால் திசைகாட்டியின் திரும்பலில் மாற்றம் ஏற்படுமா?

(ஆ) உங்கள் விடைக்கான காரணத்தை விளக்குக.

(vi) சுற்றின் P, Q இடையில் காணப்படும் மின்குமிழ்களை அகற்றி அவற்றுக்கிடையில் சுருள் கம்பியை இணைத்து அதன் மேல் மெழுகு உருண்டைகளை வையுங்கள், ஆளியை மூடிய சிறிது நேரத்தில் மெழுகு உருகியது

(அ) இம்மின்வெப்பச் சுருள்களில் பயன்படுத்தப்பட்டுள்ள கலப்புலோகங்கள் யாவை?

(ஆ) உற்பத்தி செய்யப்படும் வெப்ப அளவின் மீது செல்வாக்குச் செலுத்தும் காரணிகளில் பௌதீகரீதியில் மாற்றத்தை ஏற்படுத்த முடியாத காரணி எது?

(இ) மின்வெப்பமாக்கியில் 1000W, 230V எனக் குறிப்பிடப்பட்டிருந்தது அதற்கான விளக்கத்தை கூறுக.

B) மின்னால் இயங்கும் உபகரணங்களைத் தவிர வேலையை இலகுவாக்கும் வெவ்வேறு பொறிகளும் பயன்படுத்தப்படுகின்றன.

(i) அவ்வாறான எளிய பொறிகளின் வகையொன்றைக் கூறுக.

(ii) எளிய பொறியினால் வேலை இலகுவாக்கப்படும் விதத்தை விளக்குக.

(iii) பொறிமுறை நயத்தை காண்பதற்கான சமன்பாட்டை எழுதுக.

(iv) பொறிகளின் இரண்டு மேற்பரப்புகள் ஒன்றையொன்று மோதும் மேற்பரப்புகளில் எண்ணெய், கிறீஸ் போன்ற பதார்த்தங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அதனால் கிடைக்கும் நன்மை யாது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்றிக் காய்ச்சல் (SWINEFLU)

(சென்றவாரத்தொடர்ச்சி)

**தடுக்கும் முறைகள்**

- நோய்க் கிருமிகள் பரவாமல் தடுக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்வது.
- உடனடியாக சிகிச்சை அளித்து நோயாளியை மரணத்தில் இருந்து காப்பாற்றுவது.
- ஒருவருக்கு நோய் தாக்கும் ஆபத்து இருந்தால் அவரை உடனடியாகக் கண்காணித்து சிகிச்சை அளிப்பது.
- பாதிக்கப்பட்டவர்களைத் தனி அறையில் வைத்து சிகிச்சை அளிக்கவேண்டும். இல்லாவிட்டால் நல்ல காற்றோட்டம் உள்ள அறையில், ஒரு படுக்கைக்கும் மற்றொரு படுக்கைக்கும் ஒரு மீற்றர் இடைவெளி விட்டு படுக்க வைக்கவும்.

**மருந்து**

பன்றிக் காய்ச்சலுக்கு ஓசெல்டாமிவீர் (OSELTAMIVIR) என்ற மருந்துதான் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது.

இந்த மருந்து, நோய் தீவிரமாகாமல் தடுப்பதற்கும், குணப்படுத்தவும் பயன் படுத்தப்படுகிறது.

- காய்ச்சல் , உடல்வலி மற்றும் தலை வலி இருந்தால் பரசிட்டமோல் மருந்தைக் கொடுக்கலாம்.
- குடிக்க நிறைய தண்ணீர் கொடுக்க வேண்டும்.
- நோயாளி உள்ள இடத்திலோ அல்லது அறையிலோ யாரும் சிகரெட் பிடிக்கக் கூடாது.
- மூக்கு அடைப்புக்கு உப்புக் கரைசல் அல்லது சொட்டு மருந்தை போட வேண்டும்.
- நோய் பாதிப்பில் இருந்து மீண்ட குழந்தைகளை உடனேயே பாடசாலைக்கு அனுப்பக்கூடாது.

**வருமுன் தடுத்தல் / மருந்து கொடுத்தல்**


நோய் வந்திருக்குமோ என்று சந்தேகப் படக்கூடியவர், நோய் இருக்கலாம் மற்றும் நோய் தாக்கியிருக்கிறது என்று உறுதியானவர்களுக்கு கண்டிப்பாக மருந்து கொடுக்க வேண்டும்.

நோயாளியுடனும் நோயாளிக்கு அருகிலும் இருப்பவர்கள், வீட்டில் உள்ளவர்கள் , குடும்ப உறுப்பினர்கள், வேலை செய்யக் கூடிய இடத்தில் உள்ள வர்கள், பாடசாலை யில் நெருங்கிப் பழகு பவர்கள், நோயாளியுடன் பயணம் செய்பவர்கள், நோயாளிக்கு சிகிச்சை அளிக்கக் கூடிய மருத்துவத் துறையைச் சார்ந்தவர்கள் என எல்லோருமே நோய்த் தடுப்பு முறையை மேற்கொள்ள வேண்டும்.

## குழந்தைகளுக்கு வரும் காய்ச்சல்கள்

- தொண்டை வலியைக் குறைக்க மாத்திரை கொடுக்கலாம் ஆவி பிடித்தால் மிகவும் உதவியாக இருக்கும்.
- அஸ்பிரின்/ சாலிசிலேட் மருந்துகளைக் கண்டிப்பாகக் கொடுக்கக் கூடாது. இதனால், ரேஸ் சின்ட்ரோம் (Reye's Syndrome) என்ற நோய் ஏற்படும்.

| சிறுவர்கள் / பெரியவர்கள் | |
|---|---|
| எடை | மருந்தின் அளவு |
| 15கிலோ | 30 மி.கி.- இரண்டுமுறை X 5 நாட்கள் |
| 15-23 கிலோ | 45 மி.கி.- இரண்டுமுறை X 5 நாட்கள் |
| 24-40 கிலோ | 60 மி.கி.- இரண்டுமுறை X 5 நாட்கள் |
| 40கிலோவுக்கும் மேல் | 75 மி.கி.- இரண்டுமுறை X 5 நாட்கள் |
| **குழந்தைகள்** | |
| எடை | மருந்தின் அளவு |
| 3 மாதங்கள் | 12 மி.கி.- இரண்டுமுறை X 5 நாட்கள் |
| 3-5 மாதங்கள் | 20 மி.கி.- இரண்டுமுறை X 5 நாட்கள் |
| 6-11 மாதங்கள் | 25 மி.கி.- இரண்டுமுறை X 5 நாட்கள் |




இவர்களுக்கும் ஓசெல்டாமிவீர் மருந்தை கொடுக்க வேண்டும்.

தடுப்பு மருந்தை, நோயாளியுடன் பழகிய பின்னர் 10 நாட்கள் வரை கொடுக்க வேண் டும். அதிகபட்சம் 6வாரம் வரை கொடுக்கலாம்.

| சிறியவர்கள்/பெரியவர்கள் | |
|---|---|
| எடை | மருந்தின் அளவு |
| 15 கி.வரை | 30மி.கி./ஒருவேளை |
| 15-23கி. | 45மி.கி/ஒருவேளை |
| 24-40கி. | 60மி.கி./ஒருவேளை |
| 40 கி.மேல் | 75மி.கி./ஒருவேளை |

**ஒருவயதிற்குட்பட்ட குழந்தைகள்**

3மாதங்கள் -கண்டிப்பாக இந்த மருந்தைக் கொடுக்கக்கூடாது.

3-5 மாதங்கள் -20மி.கி./ஒருவேளை

6-11 மாதங்கள்- 25மி.கி./ஒருவேளை

**மருந்து இல்லாத மருத்துவம்**

- நோய் இருக்கும் என்று சந்தேகப்படக் கூடியவர்கள் மற்றும் உறுதியான நோய் உள்ளவர்களுடன் நெருங்கிப் பழகியவர்களைப் பழகிய இறுதி நாளில் இருந்து ஏழு நாட்கள் வரை வீட்டிலேயே இருக்கச் சொல்ல வேண்டும்.

**ஓசெல்டாமிவீர் மருந்தின் பின்விளைவுகள்**

ஓசெல்டாமிவீர் மருந்தைக் கொடுப்பதால் குழந்தைகளுக்கு அதிக பின்விளைவுகள் ஏற்படாது. ஆனால் 300 மி.கி. அளவுக்கும் அதிகமாக மருந்து எடுத்துக் கொண்டால்வாந்தி, நாசியா போன்றவை வரும். சில நேரங்களில் பிராங்கைட்டீஸ் (Bronchitis) வரும். தூக்கமின்மை வரலாம்.நிலை தடுமாற்றம் ஏற்படலாம்.

மிகச் சிலருக்கு இதயப் பாதிப்பு, வயிற்றுப்போக்கு மற்றும் டான்சிலைச் சுற்றி சீழ்கட்டி, மிக அரிதாக தோல் அரிப்பு, ஒவ்வாமை ஏற்படலாம். குழந்தைகளுக்கு வாந்தி தான் அதிகமாக வரும்.

சிலநேரங்களில், வயிற்றுவலி, மூக்கில் இருந்து இரத்தம் வருதல், தோல் நோய்கள், கண்வலி, மிக அரிதாக மூளையில் பாதிப்பு போன்றவை ஏற்படும்.

**துணை மருத்துவச் சிகிச்சை**

- செயற்கை சுவாசிப்பான் வழியாக ஒட்சிசன் செலுத்துல்
- அன்டிபயோடிக் கொடுப்பது

சந்தேகப்படக்கூடியவர்களை, நோயின் அறிகுறிகளை வைத்து, எக்ஸ்-ரே எடுத்துப் பார்க்கச் சொல்லலாம்.


நோயாளிகள் மூச்சுவிடுவதற்குக் கஷ்டப்பட்டாலோ,மூச்சுவிடும் எண்ணிக்கை அதிகமானாலோ ஒட்சிசன் கொடுக்க வேண்டும்.

தீவிரமான நிமோனியா மற்றும் மூச்சு விடுவதற்கு முடியாமல் இருந்தால் செயற்கை சுவாசம் கொடுக்கவேண்டும்.

- மூச்சு செல்லும்வழி, மூச்சு விடுதல் மற்றும் இரத்த ஓட்டம் ஆகியவற்றை ஒழுங்காகப் பராமரிக்க வேண்டும்.
- சரியான சரிவிகித நீர் உணவு, உடலில் உள்ள நீர் மற்றும் உப்பு ஆகியவற்றை சரியான அளவில் வைக்கவேண்டும்.

**மருத்துவமனையில் இருந்து வீடு திரும்புதல்**

- நோயின் தன்மை குறைந்த பின்னர், 14 நாட்களுக்குப் பின்னர் வீடு திரும்பலாம்.
- பெரியவர்கள், நோயின் வீரியம் குறைந்த ஏழு நாட்களுக்குப் பின்னர் வீடு திரும்பலாம்.



**தடுப்பு முறைகள்**

- நோயாளியை மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் போது சரியான தடுப்பு முறை களைக் கையாள வேண்டும். மூன்று மடிப்பு வைத்து அறுவை மாஸ்க் (Surgical mask) அணிய வேண்டும்.
- நோயாளியை மருத்துமனையில் சேர்த்த உடன் அம்புலன்ஸ் உள்ளேயும், வெளியிலும் மீண்டும் பயன்படுத்தக்கூடிய பொருட்களையும் சோடியம் ஹைப்போ குளோரைட் /குவார்டனரி அமோனியம் காம்பவுண்ட் கொண்டு சுத்தம் செய்ய வேண்டும்.
- சுகாதார அமைச்சின் வழிமுறைப்படி உபயோகித்த பிற பொருட்களை பாதுகாப்பாக வெளியேற்றவேண்டும்.

**மருத்துவமனையில்...**

- நோயாளிளையத் தனிமைப்படுத்தி சிகிச்சை அளிக்கவேண்டும். அவருக்கு மூன்று மடிப்பு வைத்த அறுவை சிகிச்சை மாஸ்க் அணியவேண்டும்.
- கையை நன்றாகக் கழுவிய பின்னரே நோயாளியைத் தொட வேண்டும். நோயாளியைத் தொட்ட பின்னரும் கை கழுவ வேண்டும்.
- நோயைக் கட்டுப்படுத்தக்கூடிய முன் எச்சரிக்கை நடவடிக்கைளை, பெரியவர்களாக இருந்தால் நோய் குணமான பின்னர் ஏழு நாட்கள் வரையும், குழந்தைகளாக இருந்தால், பதினான்கு நாட்கள் வரையும் மேற்கொள்ளவேண்டும்.

**டாக்டர் பி.சேகர்**
**குடும்பநல மருத்துவர்**
**சென்னை**

- நோயாளிகள் தங்கிய அறையை சில நாட்களுக்கு தொடர்ந்து சுத்தம் செய்ய வேண்டும். 70 சதவீதம் எதனோல், 5 சதவீதம் பென்சால் கோனியம் குளோரைட், 10சதவீதம் சோடியம் ஹைப்போ குளோரைட் கலந்து அறையைச் சுத்தப்படுத்த வேண்டும்.
- எந்தப் பொருளையும் கையுறை அணிந்து தான் எடுக்கவேண்டும்.
- பன்றிக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர் தங்கி இருக்கும் அறையில் உள்ள பொருட்களை மிகவும் கவனத்துடன் கையாள அல்லது வெளியேற்ற வேண்டும்.(முற்றும்)




# கீழ் முதுகுத் தண்டுவலி...

உடலும் மனமும் ஒருங்கிணைந்தால் தான் மனிதன் ஆரோக்கியமாக வாழமுடியும். இதில் உடல்உழைப்போ அல்லதுமூளைக்கு வேலை (மனஉளைச்சல்) மட்டும் இருந்தால் அவன் நோயுள்ள மனிதனாகவே வாழ முடியும். உடல் உழைப்பும் உள்ளச் செயற்பாடும் சீராக இருக்க வேண்டும்.

பழங்காலத்தில் உடல் உழைப்பு பிரதானமாக இருந்தது.இன்று அப்படியில்லை. அடுத்த தெருவுக்கு செல்வதென்றால் கூட வாகனம் பயன்படுத்தும் நிலை.நடை என்பதே பலருக்கு மறந்து போய்விட்டது. அன்று கஷ்டப்பட்டு செய்த வேலைகளை இன்று மிக்ஸி ,கிரைண்டர்கள் எளிதாக்கி விட்டன. குனிந்து நிமிர்ந்து வேலை செய்வர்கள் இன்று நின்று கொண்டே சமைத்தல், துணி துவைக்க இயந்திரம்,வீடு துடைக்க இயந்திரம் என்று எல்லாமே இயந்திர மய மாகி விட்டது.

இதனால் இன்றைய மனிதனுக்கு உடல் உழைப்பு அறவே நின்று விட்டது.

மேலும் பொருளாதாரத் தேவைகளின் அதிகரிப்பின் காரணமாக பொருள்தேடி அலையும் இவர்களுக்கு இயல்பாகவே மன உளைச்சல், மன அழுத்தம் போன்ற நோய்களின் தாக்கம் ஏற்படுகிறது.

இவ்வாறு மனமும் உடலும் சீர்கேடு அடைவதால் உடல் நோய்களின் கூடாரமாகி விடுகிறது. இதனால் பெரும்பாலானோர் நீரிழிவு, இரத்த அழுத்தம் நோய்களால் பாதிக்கப்படுகின்றனர்.

அதுபோல் இடுப்புவலி. அதாவது கீழ்த் தண்டு முதுகுவலி, கழுத்துவலி, தோள்பட்டை வலி,மூட்டுவலி எனப் பல வழிகளில் அவதிப் படுகின்றனர். ஆண், பெண் இருபாலாரையும் அதிகம் பாதி[illegible] வலியைப் பற்றி இப்போது தெரிந்து கொள்வோம்.

**கீழ் முதுகுத் தண்டு வலி உருவாகக் காரணங்கள்**

நேரம் தவறி உணவு உண்பதாலும் இரவில் அதிககாரம், புளிப்புச் சேர்ந்த உணவுப் பொருட்களை உண்பதாலும் வாயுவை அதிகரிக்கச் செய்யும் உணவுகளை அதிகம் சேர்த்துக் கொள்வதாலும் அஜீரணம், மலச் சிக்கல், உண்டாகிறது.

இதனால் குடலில் புளிப்புத் தன்மை அதிகரித்து வாயு சீற்றம் கொண்டு மேல் நோக்கி சிரசைத் தாக்கி, சிரசில் நீர்கோர்த்து கர்நீக நீராக மாறுகிறது. இது உடலின் முக்குற்றத்தின்(வாத, பித்த, கப) சீற்றத்தினால் கர்நீரக நீரானது கபாலச் சூலை நீராக மாறி கழுத்துப் பகுதிக்கு வந்து முதுகுத் தண்டு [illegible]ளுக்குத் தகுந்தவாறு இடுப்புப் பகுதியில் தங்கி நீர் கோர்க்கும். அப்படிக்கோர்க்கும் போது இடுப்புப் பகுதி இறுக்கமடையும்.

இடுப்போடு சேர்ந்து கீழ் முதுகுத் தண்டிலும் வலி ஏற்பட ஆரம்பிக்கும்.இது கர்நீரக , கபாலச்சூலை நீரினால் ஏற்படுவதுதான்.

(நூலாதாரம் - வர்மத்திறவு கோல், வர்மப்பரிகாரமுறை)

வர்ம பரிகார முறையில் தெளிவாக அகத்தியர் இது ஒரு தொற்றுநோய் அல்ல என்று கூறுகிறார்.உடல் அசதியாலும் , குடல் அழற்சி வாய்வு சீற்றமடைந்து குடலில் நீர் ஏறி அந்த நீரினாலும் இடுப்புப் பகுதியில் நீர் தங்கும். இது நாளடைவில் சளியாக மாறிதசைகளில் இறுக்கத்தை உண்டாக்கி முதுகுத் தண்டில் வலியை உண்டு பண்ணும்.இதனால் இடுப்புப் பகுதி அசையாத தன்மை அடைகிறது.

குனிந்து நிமிர முடியாமலும் இடுப்போடு சேர்த்து கால், தொடை தசைகள் இறுகி கீழ் முதுகுத் தண்டுப் பகுதியிலிருந்து பயங்கரமான வலியை உண்டு பண்ணுகிறது. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவில் இணையத்தள மையத்தில் இடம்பெற்ற வெடி விபத்தில் அறுவர் பலி

(பீஜிங்)

சீனாவில் இணையத்தள மையத்தில் ஏற்பட்ட வெடிவிபத்தில் ஆறுபேர் பலியாகினர். 37 பேர் படுகாயமடைந்தனர். சீனாவின் குய்சோ மாகாணத்தில் காய்லி நகரில் இணையத்தள மையம் இயங்கி வருகிறது.

140 கணனிகளுடன் இயங்கி வந்த இந்த மையத்தில் கடந்த 5 ஆம் திகதி இரவு திடீரென வெடி விபத்து ஏற்பட்டதில் இணையத் தள மையம் தரைமட்டமானது. பக்கத்தில் உள்ள கட்டடங்களும் சேதமடைந்தன.

இதுவரை ஆறுபேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.படுகாயமடைந்த 37 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 11 பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

வெடிவிபத்தினால் ஏற்பட்ட தீவிபத்தில் இணையத்தள மையத்தில் இருந்த அனைத்துப் பொருட்களும் சாம்பலாகின.இந்த விபத்துக்கு யார் காரணம் என்பது குறித்து பொலிஸார் விசாரித்து வருகின்றனர்.

(ஸ்ரீ-2)

# ஐரோப்பிய நாடுகளில் நிலவும் பனிப்பொழிவுக்கு 60 பேர் பலி

(லண்டன்)

ஐரோப்பிய நாடுகளில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு பனிப்பொழிவு அதிகரித்துள்ளது.மத்திய ஐரோப்பாவில் மட்டும் இது வரை 45 பேர் பலியாகியுள்ளனர். ரஷ்யாவில் 11 பேர், பிரான்ஸில் 3 பேர், ஜெர்மனியில் ஒருவர் என 60 பேர் பலியாகியுள்ளனர்.

மத்திய ஐரோப்பாவின் போலந்து நாட்டில் மட்டும் பெரும்பாலும் வீடு இல்லாத 30 பேர் பலியாகியுள்ளனர்.

லண்டனில் நிலவிய கடும் பனிப்பொழிவால் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.இதனால் 2 ஆயிரம் பாடசாலைகள் மூடப்பட்டன எனத் தெரிய வருகிறது.

(ஸ்ரீ-2)

# 60 ஆண்டுகளுக்கும் மேலாக மன்னராக இருந்து சாதனை



தாய்லாந்து அரசர் பூமிபால் அதுல்ய தேஜ் தனது83 ஆவது பிறந்த நாளை மருத்துவமனையில் இருந்தாபடியே எளிமையாக கொண்டாடினார்.

நுரையீரல் நோய் காரணமாக தற்போது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள இவர் 60 ஆண்டுக்கு மேலாக அரச பதவியில் இருந்து வருகிறார்.

உலகில் மிக நீண்ட காலம் அரச பதவியில் இருக்கும் பெருமையைப் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் அவரது 83ஆவது பிறந்த தினம் ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்பட்டது. அவர் விடுத்த பிறந்த நாள் செய்தியில் கடந்த சில ஆண்டுகளாக நாட்டில் அவ்வப்போது வன்முறையும் அமைதியற்ற சூழலும் ஏற்படுகிறது. மக்கள் ஒற்றுமையுடன் இருந்து நாட்டின் வளர்ச்சிக்காக பாடுபட வேண்டும். நாட்டில் மகிழ்ச்சி நிலவ வேண்டும் என்று கூறியுள்ளார். மருத்துவனை முன்கூடிய பொது மக்கள் பலர் பூமிபாலுக்கு வாழ்த்து தெரிவித்து கோஷங்கள் எழுப்பினர்.

(ஸ்ரீ-4)

# கொலம்பியாவில் இடம்பெற்ற மண்சரிவில் பலர் உயிரிழப்பு

கொலம்பியாவில் இடம்பெற்ற மண் சரிவில் பலர் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் கொலம்பியாவின் மெடலீன் நகரில் இடம்பெற்றுள்ளது.

மீட்புப்பணியாளர்களும் மோப்ப நாய்களும் மீட்புப்பணிகளில் தீவிரம் காட்டி வருகின்றனர். இதுவரையில் ஏழு பேர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொலம்பிய நகரங்களில் அடிக்கடி இவ்வாறான மண் சரிவுகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.உயிரிழந்த நபர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

மழை வெள்ளம் மற்றும் மண் சரிவு காரணமாக கொலம்பி யாவில் இந்த ஆண்டில் மட்டும் 176 பேர் கொல் லப்பட்டுள்ளதாக செஞ்சிலுவைச் சங்கம் சுட் டிக்காட்டியுள்ளது.


சுமார் இருநூறு பேர் வரையில் காணாமல் போயுள்ளதாக மீட்புப்பணியாளர்கள் தெரிவித்துள்ளனர். காணாமல் போனவர் களில் பலர் உயிரிழந்திருக்கக் கூடும் என அச்சம் வெளியிட்டப்பட்டுள்ளது.

கடுமையான மழையினால் பிரதேசத்தின் பல ஆறுகள் பெருக்கெடுத்து ஓடுவதாக தெரிவிக்கப்படுகிறது.மழைடயுடன் கூடிய கால நிலை நீடித்தால் அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்துவது குறித்து கவனம் செலு[illegible] நேரிடும் என கொலம்பிய ஜனாதிபதி அ[illegible] வித்துள்ளார்.

மண் சரிவினால் ஏற்பட்ட உயிர் மற்றும் உடைமைச் சேதங்கள் தொடர்பான சரியான புள்ளி விபரங்கள் இதுவரையில் வெளியிடப் படவில்லை.

(ஸ்ரீ-2)



கியூபாவிற்கு விஜயம் மேற்கொண்ட கிழக்கு தைய்மூர் லெஸ்டி நாட்டின் ஜனாதிபதி ஜோஜ் மானுவேல் ரமோசை கியூப ஜனாதிபதி ராவூல்கேஸ்ட்ரோ அரச மரியாதையுடன் வரவேற்பதை படத்தில் காணலாம்.

# அமெரிக்க பல்கலைக்கழகத்தில் இந்துமதம் பற்றிய ஆராய்ச்சிப் படிப்பு

அமெரிக்காவின் அமெல்டா பல்கலைக்கழகம் ஒன்லைன் வழியில் இந்துமதம் பற்றிய பி.எச்.டி( ஆராய்ச்சி) படிப்பை அறிமுகப்படுத்தியுள்ளது.


இதுவரை அமெரிக்கா உட்பட மேற்கத்தைய நாட்டினர் இந்துமதம் பற்றி அறியாமல் இருந்தனர். இந்துமதத்தில் பல்வேறு சிறப்புக்கள் இருப்பதை உணர்ந்த அவர்கள் அதுபற்றி அறிந்து கொள்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இதையடுத்து அமெரிக்காவின் அமெல்டா பல்கலைக்கழகம் இந்துமதம் பற்றிய பி.எச்.டி.படிப்பை ஒன்லைனில் அறிமுகப்படுத்தியுள்ளது. இது குறித்து அந்த பல்கலைக்கழகம் கூறியிருப்பதாவது,

இந்துமதம் ஆழ்ந்த வரலாறு மற்றும் ஆன்மீகத்துடன் தொடர்புடையது. ஆழ்ந்த மனோதத்துவ அறிவு கொண்டது. எங்கள் பல்கலைக்கழகத்தின் மூலம் இந்துமதம் பற்றிய ஆராய்ச்சிப் படிப்பை அறிமுகப்படுத்துவதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

இந்த படிப்பு இந்துமத மதிப்பீடு, முக்கிய நம்பிக்கைகள், பண்பாடு, வழிபாட்டுச் சடங்குகள் வழி தோன்றலாக வரும் பயிற்சிகள் உள்ளடங்கியதாக இருக்கும்.

கர்மா, வர்ணாஸ்ரமம், தர்மம் ஆகியவற்றை கடந்து வேதம் தொடர்பான படிப்பாகவும் இது இருக்கும். வாழ்க்கை சுழற்சி, வேத தத்துவங்கள், கிழக்கு மற்றும் மேற்கத்தைய நாடுகளில் எந்த அளவிற்கு இந்து மதக்கொள்கைகள் ஏற்றுகொள்ளப்பட்டுள்ளன ஆகியவையும்பாடமாக உள்ளன. (ஸ்ரீ-4)



ஆப்கானிஸ்தான் சென்றுள்ள பாகிஸ்தான் பிரதமர் யூசப் ரஜா கிலானி (வலது) ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஹமித் கர்சாயைச் சந்தித்து கலந்துரையாடுவதைப் படத்தில் காணலாம்.

# நீருக்கடியில் சுவாசிக்கும் விதமாக புதிய நீச்சல் உடை கண்டுபிடிப்பு

(லண்டன்)

ஆழ்கடல் செல்லும் ஸ்கூபா டைவிங் வீரர்களும் மீன்களைப் போல் சுவாசிக்கும் வகையில் புதிய நீச்சல் உடை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஆழ்கடலில் உள்ள உயிரினங்கள் மற்றும் புதை பொருட்கள் பற்றி ஸ்கூபா வீரர்கள் ஆய்வு மேற்கொள்கின்றனர்.நீருக்கடியில் சுவாசிப்பதற்காக ஒட்சிசன் சிலிண்டர்கள் உள்ளிட்ட உபகரணங்களையும் எடுத்துச் செல்ல வேண்டும் என்பதால் ஆய்வுப் பணிகளை முழு மனதாக நடத்த முடியாது. இதை கருத்தில் கொண்டு ஸ்கூபா வீரர்களும் நீருக்கடியில் சுவாசிக்கும் விதமாக புதிய நீச்சல் உடையை அமெரிக்காவைச் சேர்ந்த அர்னால்டு லாண்ட் கண்டு பிடித்துள்ளார்.

இது குறித்து அர்னால்டு லாண்ட் கூறியதாவது,

ஆழ்கடல் செல்லும் ஸ்கூபா வீரர்கள் சுவாசிப்பதற்காக இந்த நீச்சல் உடை வடிவமைக்கப்பட்டுள்ளது. இதற்காக திரவ நிலையில் உள்ள சிறப்பு கரைசல் (பெர்ப் ளூரோ காபன்) பயன்படுகிறது

. இந்த கரை சலில் பெருமளவு ஒட்சிசன் கலந்திருக்கும். இதனை அணிந்துள்ள ஒருவரின் காது, மூக்கு மற்றும் நுரையீரல் பகுதிகளில் உள்ள ஒட்சிசன் வெளியேறாமல் கட்டுப்படுத்தப்படும். சுவாசிக்கும் போது ஒட்சிசன் நிரம்பிய குமிழ் கள் திரவ நிலையில் மூக்கு வழியாக சென்று அவரது நுரையீரல் பகுதியை அடைகிறது.

நுரையீரல் வெளியிடும் காபனீரொட்சைட் மூக்கு வழியாக வெளியேறாமல் இரத்தத்தில் கலந்து கால்களில் உள்ள பெமோரல் நரம்புகளை வேகமாக இயக்க உதவும். சாதாரண காற்றை சுவாசிப்பது போன்ற உணர்வுதான் நமக்கு ஏற்படும் என அர்னால்டு லாண்ட் கூறினார்.

(ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாமமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ சொல்லீர்.
-பாரதியார்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# கிளிநொச்சியில் வெள்ளம் காரணமாக 3 ஆயிரத்து 638 குடும்பங்கள் இடப்பெயர்வு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ள அனர்த்தம் காரணமாக 3 ஆயிரத்து 638 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி, கண்டாவளை, பூநகரி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளிலேயே இக்குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளதுடன் 16 நலன்புரி நிலையங்களில் 764 குடும்பங்கள் தங்கவைக்கப்பட்டுள்ளன.

இவர்களுக்கான 3 நாட்களுக்கான சமைத்த உணவுகளை வழங்குமாறு கிளிநொச்சி அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் கிராம அலுவலர்களை பணித்துள்ளார்.

இதேவேளை இவ் அனர்த்தம் காரணமாக 41வீடுகள் முற்றாக அழிவடைந்துள்ளதுடன் ஆயிரத்து 627 வீடுகள் சேதமடைந்துள்ளன.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உணவு அல்லாத பொருட்களை சேவ் த சில்றன் நிறுவனம் வழங்கியுள்ளது. இதனை விட IOM, DRC, சேவாலங்கா, வேல்ட்விசன், MSF, இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், UMTOR,UNHCR, UNOPS ஆகிய நிறுவனங்கள் உணவு அல்லாத பொருட்களை வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளன.

அனர்த்த நிவாரண உதவிகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்றுக் காலை 8.00 மணியளவில் கிளிநொச்சி மாவட்டச்செயலகத்தில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

இக் கூட்டத்தின் போதுதற்போது தொடர்ச்சியாகப் பெய்துவரும் மழை காரணமாக பாதிக்கப்பட்ட மக்களின் நிலை தொடர்பாக ஆராயப்பட்டு அவர்களுக்கான உதவி நிவாரணப் பொருட்கள் வழங்குவது குறித்து கலந்துரையாடப்பட்டது. (ஸ்ரீ-3,7,30)

# நாம் தமிழர்... நாம் தமிழர்... கட்டுரை எழுதுக...

பாடசாலைகளில் மூன்றாம் தவணைக்காலம் இது. மாணவர்களின் மொழித்திறனை அறிவதற்காக தமிழ் ஆசிரியர் ஒருவர் கட்டுரை எழுதும்படி மாணவர்களைப் பணித்தார்.

கட்டுரைத் தலைப்பு ' நாம் தமிழர்... நாம் தமிழர்... ' மாணவர்கள் மிகவும் வேகமாக எழுதத் தொடங்கினர்.

ஒரு மாணவன் எழுதிய கட்டுரையை ஆசிரியர் வாசிக்கத் தொடங்கினார்.

நேற்றைய தினம் நான் யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்குச் சென்றிருந்தேன். ஒரு பெரியவர் நாரியைச் சுவட்டிய வண்ணம் வந்தார். கையில் கிளினிக் கொப்பி. அங்கு நின்ற வைத்தியசாலைப் பணியாளரைப் பார்த்து, தம்பி எலும்பு முறிவு சிகிச்சை நிலையம் எங்கே இருக்கிறது என்று கேட்டார்.

அந்தப் பணியாளரோ பெரியவரின் கையிலிருந்த கிளினிக் கொப்பியைப் பார்த்துவிட்டு, ஐயா! இது பிறசர்க் கிளினிக் கொப்பி. அங்கு போங்கள் என்றார்.

பெரியவருக்கு கோபம் வந்துவிட்டது. இது எனக்கு தெரியும் தம்பி. இப்ப எனக்கு நாரி முறிந்துவிட்டது என்றார்.

ஏன் ஐயா நாரி முறிந்தது என்று கேட்டார் அந்தப் பணியாளர். அதையேன் தம்பி கேட்கிறியள் இன்றைக்கு பிறசர்க் கிளினிக். அதற்காக தீவகத்திலிருந்து வந்தனான். வந்த மினிபஸ் பண்ணைப் பாலத்தில விழுந்து எழும்பினதில என் நாரி சவண்டது.

பின்னர் யாழ்.பிரதம தபால்கந்தோர்ச் சந்தியில்– பஸ் நிலையத்திற்கு முன்பாக ஒரு பெரிய பள்ளம். அதில் வெள்ளம். அந்தப் பள்ளத்தில் மினிபஸ் விழுந்து எழுந்ததில் சவண்டுபோன என்ர நாரி முறிந்து போயிற்று.

அதுதான் தம்பி... பெரியவர் கூறிமுடிக்க அந்தப் பணியர்ளர் அதோ! என்று இடத்தைக் காட்டினார்.

பெரியவரைப் பரிசோதித்த டாக்டர், பெரியவரே; நாரி எலும்பில வெடிப்பு. பத்துப் போட்டிருக்கிறது வீட்டுக்குச் சென்று ஓய்வெடுக்க வேணும். அசையக் கூடாது என்று ஆலோசனை கூறினார்.

டாக்டர் ஐயா! அப்பநான் வீட்ட போக முடியாது.

ஏன்?

எதில போறது?

வாகனத்தில போகலாமே!

எந்த வீதியால போறது?

பெரியவரின் இந்தக் கேள்வி டாக்டருக்குக் குழப்பத்தை ஏற்படுத்த, டாக்டர் ஐயா எங்கட யாழ்ப்பாணத்தில எல்லா வீதியும் குண்டும் குழியுமாக இருக்கு. நான் என்ன செய்ய... அந்தப் பெரியவரின் நியாயமான கேள்விக்கு விடை காணமுடியாமல் டாக்டர் தனது காரில் ஏறிக்கொள்கிறார்.

காரில் டக்கு... டக்கு... என்ற சத்தம். அப்படியே கராச்சுக்கு செல்கிறார் டாக்டர்.

மெக்கானிக்... ஐயா! காரைக் கிடங்கில விட்டுட்டியள். அதால வில்லுத் தகடு உடைந்து போச்சு.

ஓ! முதியவருக்கு எலும்பு முறிவு. என் காருக்கு வில்லுத்தகடு உடைவு. இந்தச் சிந்தனையில் டாக்டர் இருக்க,

கராச் தூணில் தொங்கிய வானொலியில்... இது வரை நீங்கள் கேட்ட செய்திகளின் சாரம்... வடக்கின் வசந்தம் யாழ்.குடாநாட்டில் வெற்றிகரமாக நிறைவடைந்து வருகின்றது. வீதிகள் யாவும் புனரமைக்கப்பட்டுள்ளன. இத்துடன் செய்திகள் முடிவடைந்தன...

ஓ! செய்திகள்தான் முடிபடைந்தன. எல்லாம் செய்திகளில்தான் முடிபடைகின்றன.

டாக்டர் வீதியில் இறங்கி நேர் கொண்ட பார்வையில் நடக்கத் தொடங்கினார். வீதியில் காத்திருந்த கிடங்கு டாக்டரை தடக்கி விழுத்த... விழுந்தெழுந்த டாக்டர் ஓ! நாம் தமிழர்... நாம் தமிழர்... தலை நிமிர்ந்து நடப்பது மகா தவறு.

தலை நிமிர்ந்தால் தட்டி விழுத்த வீதியும் ரெடியாய் இருக்கு... இப்படி அந்தக் கட்டுரை எழுதப்பட்டிருந்தது.

# மனித உரிமைகள் அமைப்புக்கள் மன்னாரிலிருந்து வெளியேற்றம்

## பொது அமைப்புகள் கவலை

(மன்னார்)

மன்னார் மாவட்டத்திலிருந்து மனித உரிமை அமைப்புக்கள் வெளியேறி வருகின்றமை தொடர்பில் பொதுமக்களும் மனிதாபிமான அமைப்புக்களும் கவலை வெளியிட்டுள்ளன.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் உட்பட சில மனித உரிமை அமைப்புக்கள் தமது பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில் அங்கிருந்து வெளியேறுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மீள் குடியேற்றப்பட்டுள்ள மக்களுக்கு அத்தியாவசிய உதவிகள், தங்குமிட வசதிகள் மற்றும் வாழ்வாதார தேவைகளை பூர்த்திசெய்யாத நிலையிலேயே இந்த வெளியேற்றம் நிகழ்ந்து வருகிறது.

அரசாங்கம் அண்மைக்காலமாக அரச சார்பற்ற நிறுவனங்கள் மீது விதிக்கின்ற புதிய சட்டங்கள் மற்றும் கெடுபிடிகள் காரணமாகவே இந்த அமைப்புக்கள் மன்னாரில் இருந்து வெளியேறி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (ச-5)

# 100 ஏக்கர் நெல் வயல்கள் வவுனியாவில் நாசம்

(வவுனியா)

கடந்த சில வாரங்களாக பெய்த கடும் மழை காரணமாக வவுனியா மாவட்டத்தில் 100 ஏக்கருக்கும் அதிகமான நெல் வயல்கள் அழிவடைந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் அவசரகால செயற்பாட்டுநிலையம் தெரிவித்துள்ளது.

நொச்சிக்குளம் அணைக்கட்டுஉடைப்பெடுத்ததால் 85 ஏக்கர் நெல் வயல்களும் தாலிக்குளம் அணைக்கட்டுஉடைப்பெடுத்ததால் 18 ஏக்கர் நெல் வயல்களும் அழிந்துள்ளதாக மேற்படி நிலையம் தெரிவித்துள்ளது. (ச-5)

## தொலைபேசிக் கடையில் திருட்டு

# ரூ.4 இலட்சம் பெறுமதியான பொருட்கள் பறிபோயின

மந்திகை ஆலடிச்சந்திக்கு அருகில் உள்ள தொலைபேசி விற்பனை நிலையத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை கொள்ளைச்சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது,

கடையின் மேற்கூரையை பிரித்து உள்ளே இறங்கிய கொள்ளையர்கள் 25ஆயிரம் ரூபா பணத்தையும் 4 இலட்சம் ரூபா பெறுமதியான கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் தொலைபேசி பொருட்கள் என்பனவற்றை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

நேற்று திங்கட்கிழமை கடை உரிமையாளர் வந்து பார்த்தபோதே இக் கொள்ளைச்சம்பவம் தொடர்பாக தெரிய வந்துள்ளது.

இது தொடர்பாக பருத்தித்துறைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஸ்ரீ-3-24-35)

# ஆங்கில ஆசிரியர் பயிற்சி மத்திய நிலையங்களை அமைக்க நடவடிக்கை

ஆங்கில ஆசிரியர் பயிற்சி மத்திய நிலையங்களை அமைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக பிரதிக் கல்வி அமைச்சர் விஜித் விஜிதமுனி சொய்சா பாராளுமன்றத்தில் நேற்று தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவும் ஆங்கில ஆசிரியர் பற்றாக் குறையை நிவர்த்தி செய்ய இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

ஆங்கிலக் கல்வி மற்றும் ஆசிரியர் பிரச்சினை தொடர்பாக வாய் மூல பதிலுக்காக எதிர்க்கட்சியினால் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்குபதில் அளிக்கையி லேயே பிரதி அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அழகியற்கலை ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்பும் பணிகள் பகிரங்கமாகவே மேற்கொள்ளப்படும் எனவும் அவர் கூறியுள்ளார். (ஸ்ரீ-2)

# தற்செயல் நிவாரண கொடுப்பனவு

(சாவகச்சேரி)

தென்மராட்சிப்பிரதேசத்தில் தற்செயல் நிவாரணத்திற்காக விண்ணப்பித்த பயனாளிகளில் இருவருக்கு 2 ஆம் கட்ட கொடுப்பனவாக தலா 10 ஆயிரம் ரூபா வீதம் எதிர்வரும் 10ஆம் திகதி வழங்கப்படவுள்ளது.

தென்மராட்சி பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவிற்கு பெயர் குறிப்பிடப்படும் இருவரையும் எதிர்வரும் 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை சமுகமளிக்கும்படி தென்மராட்சிப் பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் அறிவித்துள்ளார்.

தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளின் விபரம் வருமாறு

வ.அருந்தவம் (சுந்திரபுரம், மட்டுவில் [illegible] மியன் வாணி) (ஸ்ரீ-3-29)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்



என் அருமை மாணவர்களே! நான் கூறும் அறிவுரையை ஏற்பீர்களாக! கல்லூரியில் படிப்பு முடிந்த பின்னர் மக்கட் சேவையில் உங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்வீர்களாக! விலை மதிப்பற்ற, செல்வம் நிறைந்த பொக்கிஷமே கிடைத்தாலும் இத் தொண்டினால் கிடைக்கும் ஆனந்தத்திற்கு ஈடு இணை இல்லை என்பேன். ஏழை என்ற எண்ணத்தை , வறுமை பற்றிய அச்சத்தை மனதிலிருந்து அறவே ஒதுக்கித் தள்ளுங்கள். எந்த விதத்தில் உங்களை ஏழையாகக் கருதுகிறீர்கள்! கோச்சு வண்டியும் ஒரு ஜோடி குதிரைகளும் நமக்கு இல்லையே என்று ஏங்குகிறீர்களா? இட்ட பணியை முடிக்க சாரைசாரையாக வேலையாட்கள் இல்லையே என்று வருந்துகிறீர்களா? அதனால் என்ன, குடியா முழுகிப் போயிற்று? அல்லும் பகலும் பிறருக்காக நீங்கள் உங்கள் இரத்தத்தை சிந்தி உழைப்பீர்களானால், இந்த வாழ்க்கையில் உங்களால் சாதிக்க முடியாதது எதுவுமே இல்லை என்பதை நீங்கள் உணர்வீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். பிறப்பு, இறப்பு, விவாக பதிவாளர் சங்கத்தின் அனுசரணையுடன் பதிவாளர் நாயகம், உதவிப் பதிவாளர் நாயகம் ஆகியோருக்கான பிரிவுபசார நிகழ்வு நேற்று யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் மங்கல விளக்கேற்றுவதையும் பதிவாளர் நாயகம் எ.குணசேகர, மேலதிக பதிவாளர் நாயகம் என். சதாசிவம் ஐயர் ஆகியோருக்கு நினைவுப் பரிசில் வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-எஸ்.கரன்)

# இராணுவத்தின் விசேட படையினருக்கான நிரந்தர முகாம் வன்னியில் திறந்துவைப்பு

வடபகுதியில் நிர்மாணிக்கப்பட்ட இராணுவத்தின் விசேட படையணியினருக்கான முதலாவது நிரந்தர முகாம் நேற்றுக்காலை திறந்துவைக்கப்பட்டது.

வன்னிப் பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதியும் விசேட படையணியின் தளபதியுமான மேஜர் ஜெனரல் கமல் குணரட்ணவின் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் விசேட படையணியின் கட்டளை அதிகாரி கேணல் கரீந்திர ரணசிங்க உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். வன்னிப் பாதுகாப்புப் படைத்தலைமையகத்துக்கு அருகில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த முகாமின் நிர்மாணப் பணிகளுக்காக 200 இலட்சம் ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டிருந்தது.

எனினும் இந்தமுகாமின் நிர்மாணப் பணிகளில் இராணுவவீரர்கள் ஈடுபடுத்தப்பட்டமையினால் செலவீனம் பல மடங்காக குறைவடைந்து இருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. (ஸ்ரீ-9)

# பிரித்தானியாவுக்கு செல்லுமாறு ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கியவர்கள் முட்டாள்கள்

## சபாநாயகர் சமல்ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

பிரித்தானியாவுக்கு சென்று ஒக்ஸ்போர்ட் சிங்கள சங்கத்தில் பேசுவதில் ஆபத்துக்கள் இல்லை என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆலோசனைகளை வழங்கியவர்கள் முட்டாள்கள் என ஜனாதிபதியின் சகோதரரும், சபாநாயகருமான சமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தன்மீது அரசு சுமத்தியுள்ள குற்றச்சாட்டுக்கள் குறித்து சமல் ராஜபக்ஷவுடன் கலந்துரையாடச் சென்ற ஐ.தே.க.நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயலத் ஜெயவர்த்தனவிடமே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதனிடையே, அமைச்சர் தினேஸ் குணவர்த்தன தன்மீது போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளதாகவும், பிரித்தானியாவில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் தான் கலந்துகொள்ளவில்லை எனவும் ஜெயவர்த்தன குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# விளையாட்டு வினையானது

சமீபகாலமாகவே நேரடி சாகச விளையாட்டு நிகழ்ச்சிகள் தொலைக்காட்சிகளில் மக்களால் பெரிதும் விரும்பிப் பார்க்கப்பட்டு வருகின்றது.

நகர்ந்து கொண்டிருக்கும் கார்களை தாண்டும் வித்தியாசமான சாகசம் நேற்று முன்தினம் ஜெர்மனியில் நடைபெற்ற போது எதிர்பாராத விதமாக அசம்பாவிதம் நடைபெற்றதால் அந்த நிகழ்ச்சியை தொலைக்காட்சிகளில் மற்றும் நேரினில் கண்டுகளித்த பல ஆயிரக்கணக்கான மக்கள் அதிர்ச்சியில் உறைந்தனர்.

23 வயது இளைஞர் ஒருவர் கங்காரு போல் பாய்ந்து தனக்கு எதிரேவரும் நகர்ந்து கொண்டிருக்கும் கார்களை தாண்டிக் கொண்டே வந்தார்.

நான்கு கார்களை தாண்டிய பின்னர் ஐந்தாவதாக வந்த காரைத் தாண்ட முயற்சித்த போது திடீரென கீழே விழுந்து விட்டதால் பெரும் பரபரப்பு உண்டானது. உடனடியாக நிகழ்ச்சியை பதிவு செய்து கொண்டிருந்த அனைத்து கமராக்களின் இயக்கமும் தடை செய்யப்பட்டது.

நிகழச்சி தொடங்கும் முன்னர் இளைஞரின் பயிற்சியாளர் நிமிடத்திற்கு ஒரு காரைத் தாண்டும் இந்த இளைஞரின் சவாலை முறியடிக்கக் கூட்டத்தில் உள்ள பார்வையாளர்கள் யாரேனும் தயாரா என பகிரங்க சவால்விட்டதும் இளைஞர் மின்னல் வேகத்தில் கார்களைத் தாண்டியதும் பலருக்கு வியப்பை ஏற்படுத்தியது.

கீழே விழுந்த இளைஞரின் நிலை கவலைக்கிடமானதால் உடனடியாக மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். அவரின் முதுகுத் தண்டுவடத்தில் பலத்த அடி ஏற்பட்டு நொறுங்கியிருந்ததால் நேற்று முன்தினம் அவருக்கு அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

இருப்பினும் சாகச இளைஞர் சிகிச்சை குறித்த மேலதிக தகவல்கள் எதையும் தற்போது அளிக்கமுடியாது.

அவர் இன்னமும் அபாய கட்டத்தை தாண்டவில்லை என மருத்துவர்கள் அறிவித்துவிட்டனர். (ஸ்ரீ-2)

# இலங்கை தமிழர் பிரச்சினை தொடர்பாக பிரதமரை கலைஞர் நேரில் சந்திக்கவேண்டும்

## பழ.நெடுமாறன் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் தமிழர்களின் நிலைமை சீராகுவதற்கு, பிரதமர் மன்மோகன் சிங்கை முதல்வர் கருணாநிதி நேரில் சந்தித்து வலியுறுத்த வேண்டும் என இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் பழநெடுமாறன் கூறியுள்ளார்.

மதுரையில் செய்தியாளர்களிடம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

தொடர்ந்து இதுகுறித்து தெரிவிக்கையில், இலங்கையில் போர் நிறைவடைந்துவிட்டது என அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

ஆனால் மீளக்குடியமர்த்தப்படாமல் முகாம்களில் தமிழர்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர். தமிழக மீனவர்கள் கடலில் மீன் பிடிக்கும்போது, இலங்கை இராணுவத்தினரால் தாக்கப்படுகின்றனர். இது தொடர் கதையாகி வருகிறது.

இலங்கையில் தமிழர் பகுதிகளில் நிலைமை சீராகுவதற்கும், மீள் குடியமர்வு குறித்தும் பிரதமர் மன்மோகன் சிங்கை தமிழக முதல்வர் கருணாநிதி நேரில் சந்தித்து நடவடிக்கை எடுக்கக் கோரி வலியுறுத்த வேண்டும்.

அந்தச் சந்திப்பின்போது, தமிழக மீனவர்கள் இலங்கை இராணுவத்தினால் தாக்கப்படுவது குறித்து பிரதமரிடம் முதல்வர் கருணாநிதி எடுத்துரைக்க வேண்டும் என்றார். (ஸ்ரீ-2)

# பயங்கரவாதிகள் என்ற சந்தேகத்தின் பேரில் கைதான தமிழ்க் கைதிகள் விடுவிக்கப்படவேண்டும்

## யாழ்.மாநகரசபை உறுப்பினர் மங்களநேசன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாத இயக்கத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் ஏராளமான இளைஞர்கள் நீண்டகாலமாக பிணையில் செல்லக்கூட அனுமதியின்றி சிறையில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.

பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தம் முடிவடைந்து பயங்கரவாதம் ஒழிக்கப் பட்டு நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்பட்டுள்ள நிலையில் சந்தேகத்தின் பேரில் சிறையில் அடைக்கப்பட்டவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டுமென யாழ். மாநகரசபை உறுப்பினரும் சுகாதார குழுத் தலைவருமான மனுவல் மங்களநேசன் தெரிவித்துள்ளார்.

அவர்மேலும் தெரிவிக்கையில்,

1971 ஆம் ஆண்டுகளில் பயங்கரவாதிகள் என குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப் பட்ட ஜே.வி.பி. உறுப்பினர்கள் எவ்வித நிபந்தனையும் இன்றி விடுவிக்கப்பட்டனர். ஆனால் யுத்தம் முடிவுற்றபோதும் பல ஆண்டுகளாக சிறையில் வாடும் தமிழ்க் கைதிகள் இதுவரை விடுவிக்கப்படவில்லை. இது தொடர்பாக அரசாங்கம் தீர்க்கமான முடிவு எடுக்கவேண்டும்.

அதுமட்டுமன்றி 1987 ஆம் ஆண்டு இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பின்னர் எந்தவித நிபந்தனையும் இன்றி சகல கைதிகளும் விடுவிக்கப்பட்டனர்.

இத்தகைய நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டபோதும் தமிழ் கைதிகளை விடுவிப்பதில் மட்டும் அரசாங்கம் தாமதிப்பது ஏற்கக் கூடியதாக இல்லை என் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-6)


**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA**
**FACULTY OF ARTS**
Postponement of Examinations

Due to unavoidable circumstances the following Examinations have been re scheduled as follows:

1. Third Examination in Arts - 2009 Second semester
2. Third Examination in Fine Arts - 2009 Second semester

Venue: Ramanathan Hall, University of Jaffna

| Unit No | Subject | Old date & Time | New date & Time |
|---|---|---|---|
| ASYC 32023 | Social work & practice | 08.12.2010 1.00 p.m-4.00 p.m | 11.12.2010 9.00 a.m-12 noon |
| AEGA 32010 | English | 14.12.2010 1.00 p.m - 3.00p.m | 01.01.2011 9.00 a.m - 11.00 a.m |
| ADNC 32033 | Western Dances | 13.12.2010 1.00 p.m - 4.00 p.m | 01.01.2011 12.00 noon -3.00 p.m |
| ATAE 32033 | Tamil for Dance | 14.12.2010 9.00 a.m-12.00 noon | 08.01.2011 9.00 a.m-12.00 noon |

Candidates are kindly requested to take note of the new dates and time and be present at the scheduled time.

**Registrar**
**06.12.2010**

(C/1749)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க அவுஸ்திரேலிய அணி போராட்டம்

(அடிலெய்ட்)

இரண்டாவது டெஸ்ட்டில் இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க அவுஸ்திரேலிய அணி போராடி வருகிறது.

போட்டியின் நான்காம் நாளான நேற்றைய ஆட்டநேர முடிவில் அவுஸ்திரேலிய அணி இரண்டாவது இன்னிங்ஸில் 04 விக்கெட்டுக்களையிழந்து 238 ஓட்டங்களை எடுத்தது.

அவுஸ்திரேலியா- இங்கிலாந்து அணிகள் மோதும் 05 போட்டிகள் கொண்ட ஆஸஸ் டெஸ்ட் தொடர் அவுஸ்திரேலியாவில் நடைபெற்று வருகிறது.

இதில் முதலாவது டெஸ்ட் வெற்றி தோல்வியின்றி முடிபடைந்த நிலையில் இரண்டாவது டெஸ்ட் கடந்த மூன்றாம் திகதி அடிலெய்ட் ஓவலில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 245 ஓட்டங்களை எடுத்தது.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி நேற்று முன்தினம் மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவில் 04 விக்கெட்டுக்களையிழந்து 551 ஓட்டங்களை எடுத்தது.

இந்நிலையில் நான்காம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 568 ஓட்டங்களை எடுத்த போது 5ஆவது விக்கெட்டையிழந்தது.

இதில் கெவின் பீற்றர்சன் 308 பந்துகளில் (33 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 227 ஓட்டங்களை எடுத்து போகோரியின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

அடுத்துக் களமிறங்கிய பீறிர் அதிரடியாக ஆட இங்கிலாந்து அணி 600 ஓட்டங்களைக் கடந்தது.

மறுமுனையில் பெல் 87 பந்துகளில் அரைச்சதம் கடந்து சிறப்பித்தார்.

இந்நிலையில் இங்கிலாந்து அணி முதலாவது இன்னிங்ஸில் 05 விக்கெட்டுக்களையிழந்து 620 ஓட்டங்களைக் குவித்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.

இதன் மூலம் இங்கிலாந்து முதலாவது இன்னிங்ஸில் 375 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன்னிலை பெற்றது.

இதில் இயன் பெல் 68, பிறிர் 27 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஹரிஸ் 02 விக்கெட்டுக்களையும் பொல்லிங்கர், வோட்ஷன், டோகோரி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க 376 ஓட்டங்களை எடுக்கவேண்டிய கட்டாயத்தில் இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய அவுஸ்திரேலிய அணிக்கு வோட்ஷன்-ஹற்ரிச் ஜோடி சிறப்பான ஆரம்பத்தை வழங்கினர்.

இந்த ஜோடி முதலாவது விக்கெட்டுக்காக 84 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பகிர்ந்தபோது சைமன் ஹற்ரிச் 43 ஓட்டங்களை எடுத்து சுவானின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.


அடுத்துக் களமிறங்கிய அணித்தலைவர் பொன்டிங் 09 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சுவானின் பந்துவீச்சில் வெளியேறினார்.

அடுத்துக்களமிறங்கிய கிளார்க் சிறப்பாகத் துடுப்பெடுத்தாட மறுமுனையில் வோட்ஷன் 125 பந்துகளில் அரைச்சதத்தை எட்டினார்.

எனினும் சேன் வோட்ஷன் 57 ஓட்டங்களை எடுத்த பின்னர் பின்னின் பந்துவீச்சில் ஆட்டமிழக்க அவுஸ்திரேலிய அணி 134 ஓட்டங்களை எடுத்து 03ஆவது விக்கெட்டையிழந்தது.

அடுத்து நான்காவது விக்கெட்டுக்காக கிளார்க்குடன் இணைந்த ஹசி பொறுப்பான ஆட்டத்தை வழங்க அவுஸ்திரேலிய அணி மீண்டது.

இதில் மைக்கல் கிளார்க் 86 பந்துகளில் அரைச்சதத்தைப் பெற அவுஸ்திரேலிய அணி 200 ஓட்டங்களைத் தாண்டியது.



இந்த ஜோடி நான்காவது விக்கெட்டுக்காக 104 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்தபோது மைக்கல் கிளார்க் 139 பந்துகளில் (11 பவுண்டரிகள் உட்பட) 80 ஓட்டங்களை எடுத்து பீற்றர்சனின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

இந்நிலையில் நேற்றைய நான்காம் நாள் ஆட்டநேர முடிவில் அவுஸ்திரேலிய அணி இரண்டாவது இன்னிங்ஸில் 04 விக்கெட்டுக்களையிழந்து 238 ஓட்டங்களை எடுத்தது.

இதில் மைக்கல் ஹசி 44 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்காமல் களத்திலுள்ளார்.

பந்துவீச்சில் சுவான் 02 விக்கெட்டுக்களையும், பின், பீற்றர்சன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப் போட்டியின் ஐந்தாவதும் இறுதி நாளான இன்று அவுஸ்திரேலிய அணி இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க 06 விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் 137 ஓட்டங்களை எடுக்கவேண்டிய கட்டாயத்திலுள்ளது.

## சொக்கலேட் பெட்டியுடன் வரவேண்டிய தாய்

சவுதி அரேபியாவில் இரண்டு வருடங்கள் பணி முடித்து வீடு திரும்பும் போது தன்னுடைய நான்கு குழந்தைகளிடமும் ஒவ்வொரு குழந்தைக்கும் தனித்தனியே பெட்டி நிறைய சொக்கலேட்டுக்களுடன் வருவதாக உறுதியளித்துவிட்டுச் சென்ற செல்லத்துரை புஸ்பவல்லி (வயது36) அடுத்தவாரம் தனது சொந்த ஊரான ஹரிஸ்பத்துவவுக்கு பெட்டியில் வந்து சேர்கிற அவலம் நேர்ந்திருக்கிறது.

அவளுக்கு ஒரு சவப்பெட்டி வாங்கக்கூட எம்மிடம் பணமில்லை. அவளுடைய கணவன் இறந்துவிட்டான். அவளுக்கு சிவருபன் (வயது13), தேவிகா (வயது10), தினேஸ் (வயது 08), டிலஷ்சன் (வயது05)என்று நான்கு பிள்ளைகள்.



அவள் தனது நான்கு பிள்ளைகளையும் எவ்வாறு வளர்ப்பது என்ற வழி தெரியாது தடுமாறினாள். அதனால்தான் அவள் வெளிநாடு போக முடிவு செய்தாள். அதற்காக குருநாகலிலுள்ள ஒரு வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிலையத்திற்குச் சென்றாள். அதன் தலைமை அலுவலகம் கொழும்பிலிருந்தது.

வித்திருக்கிறார்.

எவ்வாறாயினும் புஷ்பவல்லி பணிக்காகச் சென்ற 10 மாதங்களின் பின்னர் முப்பதாயிரம் ரூபாய்களை அனுப்பியிருக்கிறார். அதன்பின்னர் கடந்த பூவையில் 40 ஆயிரம் ரூபாய்களை அனுப்பியிருக்கிறார். இதுவரை அவர் அனுப்பிய மொத்தப்பணமுமே அவ்

### சவப்பெட்டியில் வரும் பரிதாபம்

2008 நவம்பர் 10 ஆம் திகதி சவுதிக்குச் சென்ற அவளிடமிருந்து அதன் பின்னர் இற்றை வரை ஒரு கடிதம் தானும் வரவில்லை என்கிறார் தொழில் வாய்ப்பேதுமின்றி இருக்கும் புஷ்பவல்லியின் சகோதரி ஜெயலஷ்மி.

ஒவ்வொரு முறை நாம் போன் செய்து பேசும்போதும் அவர் சுப்பர் மாக்கெட்டுக்குப் போய்விட்டார் அல்லது பிள்ளைகளை அழைத்துவரப் போய்விட்டார் என்றே அங்கிருந்து பதில் கிடைக்கும் என்றே அழுதபடி சொல்கிறார் இவர்.

அவர் அங்கிருந்த இரண்டு வருடங்களையும் மொத்தமாக நான்கே நான்கு முறைதான் அவருடன் பேசக் கிடைத்தது.

ஒவ்வொரு முறை அவர் பேசும்போதும் தன்னுடைய குழந்தைகளுக்காகவே தான் எல்லாக் கஷ்டங்களையும், துன்பங்களையும் தாங்கிக்கொண்டு அங்கிருப்பதாக அவர் கூறுவார். தான் பணியாற்றும் வீட்டில் 17 பேர் இருப்பதாகவும் தான் அவர்களை சமாளிக்கப் பெரும் துன்பப்படுவதாகவும் அவர் தெரிவிப்பதுண்டு. கடைசியாக நான் அவரிடம் பேசிய போது அவர் அழுதார். தன்னுடைய குழந்தைகளைப் பார்த்துக்கொள்ளும்படியும் நவம்பர் 10 ஆம் திகதிக்குப் பின்னர் தான் உடனடியாகவே நாடுதிரும்பவுள்ளதாகவும் தெரிவித்திருந்தார்.

அது பற்றி அவர் மேலதிகமாகப் பேசுவதற்கு முன்னதாகவே தொடர்பு துண்டிக்கப்பட்டுவிட்டது என்று கூறிய ஜெயலக்சுமியின் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக உதிர்ந்துகொண்டே இருந்தது.

நாங்கள் ஏழைகள் தான். ஆனால் எனது சகோதரிக்கு எத்தகைய நோய்களும் இருக்கவில்லை. அவர் வெளிநாடு செல்வதற்கு முன்பதாக எடுத்த மருத்துவச் சான்றிதழ் அதனை உறுதிப்படுத்துகிறது என்றும் அவர் சொல்கிறார்.

தாயாரின் மரணச் செய்தியைக் கேட்டு அழ ஆரம்பித்த அந்தப் பிள்ளைகள் இன்னமும் அழுகையை நிறுத்தியதாக இல்லை. அந்தச் சிறுசுகளை பொறுத்தளவில் தாயாருடைய மரணம் அவர்களுடைய இதயங்களை நொருக்கிவிட்டிருக்கிறது. அவர்களுடைய மகன் செய்தி கேள்விப்பட்ட நாளிலிருந்து நாட்களை எண்ணிக்கொண்டிருக்கிறான் என்று கண்களிலிருந்து கரை புரண்டோடும் கண்ணீரை கட்டுப்படுத்த முடியாதபடி அழுகையினூடே ஜெயலக்ஸ்மி சொல்கிறார்.

நவம்பர் 04 ஆம் திகதி தான் புஸ்பவல்லிக்கு தொலைபேசி எடுத்ததாகவும் அப்போது அவர் சுகவீனமாக இருப்பதாக தனக்குச் சொல்லப்பட்டதாகவும் ஜெயலக்ஸ்மி சொல்கிறார்.

05 ஆம் திகதி தனது கைத்தொலைபேசிக்கு பல முறை தொலைபேசி அழைப்பு வந்து துண்டிக்கப்பட்டதாகவும், தான் அந்த எண்ணை அவதானித்த போது அது தான் புஷ்பவல்லியுடன் பேசிய அதே தொலைபேசி எண்ணாக இருந்ததால் அந்த எண்ணுக்கு தொலைபேசி எடுத்ததாகவும் குறிப்பிடும் ஜெயலக்ஸ்மி அப்போது தனது சகோதரி இறந்துவிட்டதாக மறுமுனையில் கூறப்பட்டதை தன்னால் நம்ப முடியாதிருந்ததாகவும் சொல்கிறார்.

எனவே உடனடியாகவே தனது வீட்டிற்கு அயலில் இருக்கும் அரபு நாட்டில் பணிசெய்து விட்டு வந்திருந்த பெண்ணுடைய வீட்டுக்குச் சென்று அவர் மூலமாக அரபு மொழியில் மீளவும் அந்த எண்ணை அழைத்து விசாரித்த போது சகோதரி இறந்தது உறுதிப்படுத்தப் பட்டதாகவும் அவர் தெரிவிக்கிறார்.



எனது சகோதரி இறந்து விட்டதாக தெரிவித்த அவர்கள் அவரது சடலத்தை 27 ஆம் திகதி அளவில் எமக்குக் கிடைக்கக்கூடிய வகையில் அனுப்பி வைப்பதாகவும் தெரிவித்தனர் என்கிறார் ஜெயலக்சுமி. சொக்கலேட் பெட்டிகளுடன் தாயார் வருவார் என்று காத்திருந்த அந்தப் பிஞ்சுகள் தாயார் மூடப்பட்ட பெட்டியில் வந்திறங்குவதை எப்படித் தாங்குவர்!

நன்றி:- ராணி முஹம்மட், சண்டே லீடர்

## கதிர்காமர்...

உறவுகளில் விரிசல் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

லக்ஸ்மன் கதிர்காமர் நினைவுப் பேருரை நிகழ்வுகளை வெளி விவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் வழிநடத்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஏ-7)

## தீவகத்து...

சேவைகள் அனைத்தும் நேற்று முன்தினம் மதியம் தொடக்கம் இடைநிறுத்தப் பட்டிருந்தது.

இந் நிலையில் நேற்று மழை குறைவடைந்துள்ள நிலையில் போக்குவரத்துச் சேவைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-4)

## மின்சார...

இவ்வார்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர். இவர்களில் சிலர் கூரை மீதேறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று இரவு 7 மணியளவில் ஸ்தலத்துக்கு விரைந்த பொலிஸார் போராட்டத்தை கைவிடுமாறு கோரிய போதும் இதனை அவர்கள் ஏற்றுக் கொள்ளாததன் காரணத்தால் கண்ணீர் புகை மற்றும் நீர் பீரங்கிகளால் பிரயோகம் நடத்தினர்.

ஆர்ப்பாட்டங்களில் இருவர் காய மடைந்து சிகிச்சை பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் பதற்றநிலை ஏற்பட்ட போதும் போராட்டக்காரர்கள் தொடர்ந்தும் தமது போராட்டத்தை நடத்தி வருகின்றனர். (ச-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவட்டங்களுக்கிடையிலான இட...

திக ஆசிரியர்களை இட மாற்றுவதா யின் அதற்கெனஒரு மாகாணத்திற்கு என்ற கொள்கை அல்லது இடமாற் றத்திட்டம் அவசியம். யாழ்ப்பாண மாவட்டத்திற்குஎனஒருதிட்டமும்வவுனி யாவுக்கு என வேறு ஒருதிட்டமும்மன் னார் மாவட்டத்துக்கென பிரிதொரு இடமாற்றத்திட்டமும் நடைமுறைப் படுத்துவதை சங்கம் கண்டிப்பதோடு தனது கடுமையான எதிர்ப்பையும் தெரிவிக்கின்றது.

இடமாற்றங்கள் செய்யும்போது நியமன சேவை நிபந்தனைகளுக்கு முரணாக இடமாற்றங்கள் ஆசிரியர் களின் சம்மதம் இன்றி செயற்படு த்த முடியாது. அவ்வாறு செய்ய முற் படுவது ஆசிரியர்களில் அடிப்படை மனித உரிமை மீறும் செயலாகும்.

சேவை நிபந்தனைகளை மாற்று வதற்கான அதிகாரம் ஒரு அதிகாரிக்கு இருக்கும் என யாராவது ஒரு மாகாண அதிகாரி கருதுவார் என்றால் அது தவறு. எந்த அதிகாரியும் தனது சொந்த விருப்பு வெறுப்புக்களின் அடிப்படையில் சேவை நிபந்தனை களை மாற்ற முடியாது.

அவ்வாறு செய்ய முற்பட்டால் ஆசிரியர்களை நீதிமன்றத்தில் சந் திக்க வேண்டிய நிலை அவ்வதிகாரிக்கு ஏற்படுவது தவிர்க்க முடியாதது. இச் சூழ்நிலை ஏற்படுவதை தமிழர் ஆசி ரியர் சங்கம் விரும்பவில்லை.

மேலதிகமென மாற்றப்பட உத் தேசிக்கப்பட்டுள்ள ஆசிரியர்களின் பெயர் பட்டியலில் உள்ள 98 வீத மான ஆசிரியர்கள் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் உறுப்பினர்கள், சில நூற் றுக் கணக்கான அங்கத்தவர்களின் அடிப்படை மனித உரிமைகள் ஒரு பிழையான இடமாற்றத் திட்டத்தி னால் மீறப்படும்போது சங்கம் அதைப் பார்த்துக்கொண்டு இருக்க முடியாது.

அவர்களின் அடிப்படை மனித உரிமைகள் தொடர்பாகவும் அவர் களின் நலன்களிலும் சங்கம் தீவிர அக்கறையுடன் செயற்படுவது தவிர் க்க முடியாதது.

ஆசிரியர்களின் அடிப்படை மனித உரிமைகள் மீறப்படாமல் வன்னியிலுள்ள ஆசிரிய வெற்றி டங்களை நிரப்பக் கூடிய சிறந்த முறைகள் இருக்கின்றன.

சிறந்த முறைகள் இருக்கும் போது பிழையானதும் அடிப்படை மனித உரிமைகள் மீறப்படக் கூடி யதுமான முறைகளை ஏன் பின் பற்ற வேண்டும்? மாகாண நிர்வா கத்தின் இவ் அணுகுமுறையானது கனியிருக்க காய் கவர்ந்த நிலை யாகவுள்ளது.

ஆசிரியர்களின் அடிப்படை மனித உரிமைகள் மீறப்படாமல் இடமாற்றத்தின் மூலமும் வேறு சட்ட ரீதியான நடவடிக்கைகள் மூலமும் வன்னி பெருநிலப்பரப்பிலுள்ள ஆசிரிய வெற்றிடங்களை நிரப்பி அம் மாணவர்களின் கல்வி அபி விருத்தியை மேற்கொள்வதற்காக மாகாண கல்வி அமைச்சுடனும் மாகாணக் கல்வி திணைக்களத்து டனும் தமிழர் ஆசிரியர் சங்கம் பேச்சு வார்த்தை நடத்த தயாராகவுள்ளது.

இதற்கான முயற்சியில் சங்கம் ஈடுபட்டுள்ளது என சங்கத்தின் பொது செயலாளரால் விடுக்கப்பட்ட பத்திரிகை செய்தியில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (எ)

## தங்களின்...

இதனைத் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிப் பயங் கரவாதத்தை இல்லாதொழித்தமைக்கு ஐக்கிய தேசியக் கட்சி எப்போதும் எதிர்ப்பை வெளியிடவில்லை.

படையினர் எந்தவொரு சந்தர்ப் பத்திலும் யுத்தக் குற்றச் செயல் களை மேற்கொண்டதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவிக்கவில்லை.

யுத்தத்தின்போது சில சம்பவங் கள் இடம்பெற்றதாகவும், உலகின் அனைத்து யுத்தங்களின் போதும் இவ்வாறான சம்பவங்கள் இடம் பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித் துள்ளார். (ச-5)

## இராணுவ நீதிமன்றம்...

ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவருமான சரத் பொன்சேகா மனுவொன்றை தாக்கல் செய்திருந் தார்.

இந்த மனு மீதானவிசாரணையை யாப்பின் கருத்துப்படி, இராணுவ நீதிமன்றமீ ஒரு நீதிமன்றம் ஆகுமா என்பத்த தீர்மானிக்கும் வரை நிறுத்தி வைக்கும்படி உயர் நீதிமன் றத்தினால் மேன்முறையீட்டு நீதிமன் றுக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட் டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5).

## கரு ஜெயசூரியவுக்கு...

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரியவிற்கு எதி ராக நாடாளுமன்றத்தில் அரசாங் கத்தினால் நம்பிக்கையில்லாப் பிரே ரணைக் கொண்டுவரப்படவுள்ள தாக அரசாங்கத்தின் முக்கிய அமைச் சர்களில் ஒருவரும் இலங்கை ஜனாதி பதியின் நம்பிக்கைக்குரியவருமான விமல் வீரவன்ச குறிப்பிடுகின்றார்.

நேற்று நாடாளுமன்ற நடவடிக் கைகள் நடைபெற்றபோது ஊடக வியலாளர்களைச் சந்தித்த அமைச் சர் விமல் வீரவன்ச இதனைத் தெரி வித்துள்ளார்.

இலங்கையில் நடைபெற்ற யுத் தக் குற்றம் தொடர்பில் விசாரணை நடத்தப்படவேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய பத்திரிகை ஒன்றிற்கு பேட்டி வழங்கியதாகவும் இந்த பேட்டி குறித்தே அவர்மீது நம்பிக்கையில் லாப் பிரேரணை கொண்டுவரப்பட வுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக் கின்றன.

இதேவேளை இலங்கையில் யுத்தக் குற்றம் இடம்பெற்றிருக்குமா யின் அது விடுதலைப் புலிகளினா லேயே நடத்தப்பட்டிருக்கும் என ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப் பினரும் முன்னாள் ஜனாதிபதி ரண சிங்க பிரேமதாசவின் மகனுமான சஜித் பிரேமதாஸ குறிப்பிடுகிறார்.

இலங்கையில் இடம்பெற்ற யுத்த குற்றம் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என ஐ.தே.கவின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய தெரி வித்த கருத்து குறித்து அமைச்சர் விமல் வீரவன்ச எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே சஜித் பிரேம தாஸ இவ்வாறு கூறியுள்ளார்.

இதேபோன்று ஐ.தே.க.பிரதித் தலைவர் கரு ஜெயசூரியாவுக்கு எதி ராக நம்பிக்கையில்லா பிரேரணை ஒன்றை கொண்டுவரவுள்ளதாக அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த நாடா ளு மன்றத்தில் தெரிவித்தார். (ச-5,7)

## இலங்கையில்...

அடிப்படையில் இக் கேபிள் குறிப்பு அனுப்பப்பட்டுள்ளது. எனினும் அதன் மூலம் விபரங்கள் குறிப்பிடப்படவில்லை.

இலங்கை, பாகிஸ்தான், நேபாளம் ஆகிய நாடுகளை தள மாகக் கொண்ட லஷ்கர்-இ-தொய்பா அங்கத்தவர்களின் உதவியுடன் தென்னிந்தியாவில் இரு அணிகளை நிலைப்ப டுத்துவதற்கு லஷ்கர் தலைவர்களில் ஒரு வரான ஷபீக் கபா கடுமையாக முயற்சி செய்ததாக அக் கேபிளில் தெரிவிக்கப்பட் டுள்ளது. (ச-5)

## ஜனாதிபதி...

கத்தினாலும், சிறிலங்கா சுதந்திரக் கட்சி யின் பிரித்தானியக் கிளையினாலும் கொடுக் கப்பட்டிருந்தது.

இந்த அறிவுறுத்தல்களின் பிரகாரம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பிரித் தானியாவுக்கு விஜயம் செய்ய வேண் டாம் என இலங்கையின் வெளிவிவகார அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆயினும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கொழும்பில் இருந்து புறப்பட்ட பின்னரே இந்த அறிக்கை வெளிநாட்டு அமைச்சி னால் ஜனாதிபதி செயலகத்துக்கு வழங் கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இந் நிலையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பிரித்தானிய விஜயத்தை ஏற்பாடு செய்தவர்கள் தொடர்பில் விசாரணை களை மேற்கொள்ள சிறிலங்கா சுதந்திர கட்சியின் பிரித்தானிய கிளையின் தலைவர் ராணி புலத்வெல நட வடிக்கை எடுத்துள் ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பிரித் தானிய விஜயம் தோ ல்வி கண்டமைக்கு ஐரோப்பிய நாடொன் றில் உள்ள பெண் இரா ஜதந்திரி ஒருவர் பின்ன ணியில் செயற்பட்டுள் ளதாக ராணி புலத் வெல குறிப்பிட்டுள் ளார். (ச-5)

CENTRAL TUITION CENTRE
C.T.C Brown Road, Jaffna

யாழ் நகரில் Super Grade ஆசிரியர் குழுவினால் வகுப்புகள் நடைபெறுகின்றன

தரம்-9,10,11 ஆரம்பம் 06.12.2010 முதல்

தமிழ் :- ஞானதிருக்கேதீஸ்வரன்
கணிதம் :- S.பேரின்பநாதன், கி.சிவகுமார், V. பார்த்தீபன்
விஞ்ஞானம் :- S.முகுந்தன், V.பார்த்தீபன்
ஆங்கிலம் :- S.சந்திரமௌலி
வரலாறு :- S.ஜெயகாந்தன்
சைவசமயம் :- N.T.தரன், S.நவநீதன்
வர்த்தகம் :- S.ஐங்கரன்
புவியியல்-சுகாதாரம்:- K.கௌதமி

தரம்-6,7,8
விஞ்ஞானம், கணிதம்:- M.ஜெறோம்
சைவசமயம், தமிழ் :- K.கௌதமி
சுகாதாரம், குடியுரிமை :- T.வசந்தன்
ஆங்கிலம் :- S.சுமணன்

Elocution வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

சிங்களம் எழுதப் பேச வாசிக்க
S.சுலக்ஷனா



தரம்-1-5
தமிழ், சமயம், கணிதம், சுற்றாடல் :- K.கௌதமி, T.பத்மவாசினி
ஆங்கிலம் :- S.சுலக்ஷனா

English Medium
வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
By:M.Jerom

தரம் 4,5 புலமைப் பரிசில் வகுப்பு
S.இலிங்கசீலன்

Spoken English with Grammar
By: S.Santhiramouli

ஆரம்பம் 06.12.2010 முதல்

A/L கலை, விஞ்ஞான, வர்த்தக, வகுப்புக்கள் நடைபெறுகின்றன.



விஞ்ஞானம்:
இணைந்த கணிதம்:- கு.ஐங்கரன்
இரசாயனவியல் :- த.சிவகுமார்
பௌதிகவியல் :- V.பார்த்தீபன்

கலை:
தமிழ் :- N.தமிழிந்திரன்
இந்து நாகரிகம் :- N.T.தரன்
இந்து சமயம் :- S.நவநீதன்
புவியியல் :- K.கௌதமி
நாடகமும் அரங்கியலும்:- T.வசந்தன்
அளவையியல் :- T.அருட்செல்வம்
அரசியல் விஞ்ஞானம்:- S.ஸ்ரீரங்கநாதன்

வர்த்தகம்:
பொருளியல் :- N.B.கஜீபன்
வணிகக் கல்வி :- S.யசோ
கணக்கீடு :- A.P.பகீரதன்

(த-1752)

ஐடியல் அக்கடமி

| | | | |
|---|---|---|---|
| சீரணிச் சந்தி சண்டிலிப்பாய் | இடைப்பிட்டி காரைநகர் | கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம் | அந்தோனியார் கோயிலடி மானிப்பாய் |

❁ ஒழுங்கும் கட்டுப்பாடும் நிறைந்த நிறுவனம்
தரம் 6 முதல் O/L ,A/L வரை
கணித ஆசானும் நிர்வாகியும் V.N.பத்மநாதன்
கல்வியாண்டு 2011
ஆரம்பம்: 09.12.2010 வியாழன் 3.30 PM
(த-1753)

கிறிஸ்ரல் கல்வி நிலையம்
புதிய கல்வியாண்டு 2011
தரம் -3 முதல் O/L வரை
ஆரம்பம்
திக்கம் 09.12.2010- 3.30 Pm
நெல்லியடியில் 12.12.2010-9.00 Am

எமது தனித்துவமான ஆசிரியர் குழு
கணிதம் : K.யோகமூர்த்தி
விஞ்ஞானம் : R.சிவசங்கர், T.ஐங்கரன், A.அச்சுதன்
ஆங்கிலம் : V.ஜெயக்குமார், S.சடகோபன், T.பிரபுதேவா, R.பிரதீபன்
தமிழ் : T.வனஜா, S.தர்சிகா
சைவசமயம் : V.யுகசீலன்
வர, புவி, குடியி. : R.கருணாகரன், P.ஜோஜ்
சுற்றாடல் : T.F.மனோகரன்
வர்த்தகம் : S.ஜீவா
I.C.T : T.சுதா
NOTE: புதிய அனுமதிகள் 9ஆம் திகதி முதல் 12ஆம் திகதி வரை மட்டும் வழங்கப்படும்.
(3191)

உடனடியே...
2011, January கல்வி ஆண்டில் UK,Canada செல்வதற்கான அரிய வாய்ப்பு
❁ குறைந்தபட்ச G.C.E.O/L உடன் உள்வாங்கும் இறுதி சந்தர்ப்பம்.
❁ பல நிறுவனங்களை முந்திக் கொண்டு செல்லும் இலங்கையில் முன்னணி நிறுவனமான European College of higher Studies வழங்கும்
1) IELTS அவசியமில்லை
2) Sponsor வசதி குறைந்த விலையில்
3) முன்கூட்டிய சட்டணம் எதுவும் இல்லை.
4 அனைத்து செலவுகளும் அடங்கலாக 700000/=
5) London city, Out of city என்பவற்றின் கல்லூரிகளின் நெருங்கிய ஒரே நிறுவனம்.
6) நீண்ட நாள் அனுபவம்
7) கல்லூரிகளின் சட்டணம் Refund ஆக குறிய காலத்தில் பெற்றுத்தரப்படும்.
Study in UK,Canada
⇨ தொழில் வாய்ப்புக்கான உறுதிமொழி
⇨ வடக்கு மாணவர்களின் நம்பிக்கையுடனான தெரிவு
தொடர்புகளுக்கு:
European College of higher Studies
190,Grand Pass Road, Colombo -14 Tel No.:0114366331 0773823872
315 1/2,Parameshwara Junction, Palaly Road,Jaffna. Tel No.: 021 3734747 0773537378
(3197)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட் யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.12.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org